



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 115 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை (30.11.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 05, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60





பிரதமர் பதவியை சஜித்திற்கு வழங்குமாறு சஜித்தின் மனைவி ஜலனி பிரேமதாச, கோட்டாபயவிடம் தொலைபேசியில் கோரிக்கை விடுத்ததாக டயானா கமகே எம்.பி. நாடாளுமன்றத்தில் பேசிய உரை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இரட்டைக்குடியுரிமை பிரச்சினையை வைத்து டயானா கமகே எம்.பியின் பதவியை பறிப்பதற்கு சஜித் முயல்வதாக தகவல்கள் வெளிவந்ததையடுத்தே டயானா கமகே பல அரசியல் உள்ளக விடயங்களை வெளியிட ஆரம்பித்துள்ளதாக தெரிகிறது.

# ஊசி மூலம் போதை நுகர்ந்த சிறுவன்;
# யாழ். வைத்தியசாலையில் உயிரிழப்பு



•யாழ். செய்தியாளர்

ஊசி மூலம் போதைப்பொருளை நுகர்ந்து வந்த 15 வயதுடைய சிறுவன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டா ரங்கள் தெரிவித்தன.

குறித்த சிறுவனுக்கு காய்ச்சலென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், வைத்திய பரிசோதனையில் சிறுவனுக்கு கிருமித் தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டறியப் பட்டது. 02 பக்கம்

# மீண்டும் பரவும் கொரோனா



•கே.சுபானி

நாட்டில் மீண்டும் கொவிட் -19 தொற்று பரவலடைய ஆரம்பித்துள்ளதால் அனைவரும் கட்டாயமாக சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டுமென சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். 02 பக்கம்

# மாவட்ட அபிவிருத்தி சபைகள் மீண்டும் உருவாக்கம்



ஜனாதிபதி ரணில் சபையில் அறிவிப்பு

•நமது நிருபர்

நாட்டில் மாவட்ட அபிவிருத்தி சபைகளை மீண்டும் உருவாக்குவதற்கு இணங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் நிலையில், புதிய அரசியல் கலாசாரத்துக்குச் செல்லும் நோக்கில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்படுதல் அவசியமாகும் என்றும் அதனூடாக பல்வேறு நலன்கள் கிடைக்கப்பெறும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன சபையில் உரையாற்றும்போது... 02 பக்கம்

## மனிதக் கடத்தல் விவகாரம்

# ஓமான் தூதரக செயலாளர் விமான நிலையத்தில் கைது

•நா.தினுஷா

சுற்றுலா விசாவினூடாக வேலைவாய்ப்புக்காக ஓமானுக்குச் சென்றிருந்த பெண்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தமை, மனித வியாபாரம் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள, ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்தின் மூன்றாம் நிலை செயலாளராக கடமையாற்றிய ஈ.குஷானை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. அதற்கமைய, அவர் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 02 பக்கம்

# பொத்துவில் வைத்தியசாலை முற்றாக ஸ்தம்பிதம்

•நா.தினுஷா

பொத்துவில் மருத்துவமனை நிர்வாகத்தின்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் அந்த வைத்தியசாலையில் மருத்துவ சேவைகள் முற்றாக ஸ்தம்பித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து ஊடக அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டுள்ள அந்தச் சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது. இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 02 பக்கம்

# பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது

## அரசாங்கம் உறுதி



•கே.சுபானி

நாட்டில் பால்மாவுக்கு ஒருபோதும் தட்டுப்பாடு ஏற்படாதென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார். 02 பக்கம்




சர்வதேச பயணிகள் கப்பலான 'மெயின் ஷிஃப் 5' நேற்றுக்காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. அதில் இரண்டாயிரத்து 500 பயணிகளும் ஆயிரம் பணியாளர்களும் வருகை தந்ததுடன், அந்தக் கப்பல் இன்றைய தினம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சென்றடையவுள்ளது. (படப்பிடிப்பு: லலித் பெரேரா)

# நிதி திரட்ட முடியாத நிலையில் அரசாங்கம்



## பரந்துபட்ட கலந்துரையாடல்களை வலியுறுத்துகிறார் அமைச்சர் பந்துல

•நா. தினுஷா

நாட்டின் தற்போதைய நிலைமையில் அரச பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள், ஓய்வூதியம் மற்றும் பெற்றுக்கொண்ட அரச கடன்களுக்கான வட்டி மீள் செலுத்துகை போன்ற இரண்டு செயற்பாடுகளுக்குமான நிதியை அரசாங்கத்தால் திரட்டவே முடியாது என்றும் பொதுமக்களின் நிதி கையாள்கை தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள் பரந்துபட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான... 02 பக்கம்

# பஸ் வேகமாக சென்றால் முறைப்பாடளிக்க புதிய இலக்கம்




•கே.சுபானி

அதிவேகமாக செல்லும் பஸ்கள் குறித்து முறைப்பாடளிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 02 பக்கம்

## மாணவன் மீது தீ வைத்த கொடூரம்

# தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் கைது

•கே.சுபானி

கண்டி, அம்பிட்டிய பகுதியில் மாணவரொருவரின் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளாரென பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். 02 பக்கம்

# வெளிநாட்டுக்குச் செல்லும் மருத்துவர்களுக்கு எச்சரிக்கை

## விதிமுறைகளை மீறினால் கடும் நடவடிக்கையென்கிறார் அமைச்சர் கெஹேலிய



•நா. தினுஷா

சட்ட விதிமுறைகளை மீறி வெளிநாடுகளுக்குச் செல்லும் வைத்தியர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் மருத்துவ சபையின் அங்கத்துவம் நீக்கப்பட்டு, வெளிநாடுகளிலுள்ள மருத்துவ சபைகளில் அங்கத்துவம் பெறுவதற்கான அனுமதியும் வழங்கப்பட மாட்டாது. 02 பக்கம்

# புத்தசாசன அமைச்சின் பெயரில் உள்ள பிழை

## கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் சபையில் சுட்டிக்காட்டு




•ம.சுசிகலா

புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சு என்ற பெயரிலேயே பிழை இருக்கிறது. ஒன்று மத விவகார கலாசார அமைச்சு என்று இருக்கலாம். அல்லது எல்லா மதங்களையும் குறிப்பிட்டு புத்த சாசன, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் விவகார அமைச்சு என்று வரலாம். புத்தசாசன சமய விவகார அமைச்சு என்பதற்கு பதிலாக சமய விவகார அமைச்சு என்றே குறிப்பிடலாம். 02 பக்கம்

# இந்திய மீனவர்கள் 24 பேர் கடற்படையினரால் கைது

## அத்துமீறி நுழைந்ததாக காரைநகரில் மடக்கிப்பிடிப்பு



•ம.சுசிகலா

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் 24 பேரை கடற்படையினரும் கரையோர பொலிஸாரும் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்ததுடன், 05 இழுவைப் படகுகளையும் காரைநகர் கடற்பரப்பில் கைப்பற்றினர். 02 பக்கம்

# மாணவர்களுக்கான 80 வீத வருகை பிரச்சினைக்குரியது

## கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை

•நா.தினுஷா

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள், பாடசாலை இடம்பெற்ற நாட்களில் நூற்றுக்கு 80 சதவீத பாடசாலை வருகையை கட்டாயப்படுத்த எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் பிரச்சினை இருப்பதாக அமைச்சரவை ஊடகப்பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

## பஸ் வேகமாகச் சென்றால்...

அதிவேகமாக பயணிக்கும் பொது போக்குவரத்து பஸ்கள் குறித்து 24 மணிநேரமும் இயங்கும் 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தினூடாக முறைப்பாடளிக்க முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பயணிகளின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் அதிவேகமாகச் செல்லும் பொது போக்குவரத்து பஸ்கள் குறித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

## மாணவன் மீது தீ வைத்த...

அம்பிட்டிய தம்பவெல பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபரை கைதுசெய்யும்போது அவரிடம் கைக்குண்டு ஒன்றும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பலத்த தீக்காயங்களுக்குள்ளான குறித்த மாணவனுக்கு அறுவைசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டி, அம்பிட்டிய மீகனுவ பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன், அம்பிட்டிய புனித பெனடிக் கல்லூரியில் கல்வி பயின்று வருகிறார். அவர் நடந்துமுடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் விசேட 'ஏ' சித்தி பெற்றுள்ளார்.

இந்த சந்தோஷத்தை தனது பாட்டியிடம் பகிர்வதற்காக கடந்த 26ஆம் திகதி இரவு தந்தையுடன் சென்று தமது வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தவேளை, அம்பிட்டிய பகுதியில் வைத்து, இனந்தெரியாத ஒருவரால் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பலத்த தீக்காயங்களுக்குள்ளான மாணவன் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட மாணவனின் கழுத்தின் கீழ்ப்பகுதி முழுவதும் தீக்காயங்களுக்குள்ளாகியுள்ள நிலையில் அவருக்கு அறுவைசிகிச்சை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாணவனின் தந்தை தெரிவிக்கையில், ''தீவைத்த நபருடன் மேலும் சிலரும் இருந்தனர். எனினும் இருள் சூழ்ந்திருந்ததால் அவர்களை அடையாளம் காணமுடியவில்லை''| என்றார்.

அம்பிட்டிய பிரதேசத்தில் சிலகாலமாக அச்சத்தை ஏற்படுத்திவரும் இதுபோன்ற கும்பல் பல மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபட்டுள்ள போதிலும், இது தொடர்பில் பொலிஸார் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தக் கும்பலுடன் சேர்ந்து ஹெரோயின், கஞ்சா உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அம்பிட்டிய மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி மக்களை மிரட்டி பணம் பறித்து வருகின்றனர். சில அதிகாரிகள் குற்றவாளிகளுக்கு தகவல் கொடுத்த நபர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தினர். இதைச் செய்வதால் இந்த கும்பல்களுக்கு எதிராக எவரும் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்று தலைமறைவானார்.

அம்பிட்டிய பகுதியை அச்சத்துக்குள்ளாக் கியுள்ள இச்சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வந்ததுடன், சந்தேகநபரை கைது செய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் நேற்று (29) தலைமறைவான சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## புத்தசாசன அமைச்சின்...

அடிப்படையிலேயே பிழைகள் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டினார்.

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வெடுக்குநாரி மலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மக்கள் தொடர்ச்சியாக வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தார்கள். அங்கு இந்து மதகுரு ஒருவர் இருக்கிறார். ஆலயத்தின் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், அண்மையில் இரண்டு இரண்டரை வருடங்களாக வழிபாடுகள் நடைபெறுவதில்லை. தொல்பொருள் திணைக்களம் அந்த மலையை சேதப்படுத்தியதாக ஆலயத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது. ஆனால், தற்போது அந்த மலையை சேதப்படுத்தவில்லையென தீர்ப்பும் வழங்கப்பட்டிருந்தது.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தொடர்ச்சியாக திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர். விசேட தினங்களில் பூஜை வழிபாடுகளில் பிரதேச மக்கள் ஈடுபட்டமை வழமை. தற்போது அது முடியாமலிருக்கிறது. இந்த மக்களின் ஒரே கோரிக்கை அந்த ஆலயத்தை வழிபடுவதற்கான அனுமதியைத் தரவேண்டும் என்பதேயாகும். நான் இது தொடர்பில் பல தடவைகள் கூறியிருக்கிறேன். உங்களிடம் சாதகமான எண்ணப்பாடுகள் இருக்கலாம். ஆனால், அங்குள்ள மக்கள் பலன் பெறுகின்ற வகையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்து மக்களின் அடையாளங்களை அழிக்கவோ அல்லது வழிபாடுகளை தடுப்பதோ எங்களுடைய நோக்கமல்ல என்று நீங்கள் என்னிடம் கூறியிருக்கிறீர்கள். ஆனால், கீழ்மட்ட அதிகாரிகள் மக்களை தொடர்ச்சியாக வஞ்சிக்கின்ற செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர். அமைச்சர் அவர்களே இந்த வெடுக்குநாரி மலையிலே மக்கள் தொடர்ச்சியாக எந்த சேதமும் ஏற்படாத வகையில் வழிபாடு செய்வதற்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## இந்திய மீனவர்கள்...

இந்திய மீனவர்களுடன் கைப்பற்றப்பட்ட இழுவைப் படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன், அவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மயிலிட்டி மீன்பிடித் துறைமுக கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்ப டைக்கப்பட்டன.

2022ஆம் ஆண்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கடற்படையினர் 35 இந்திய இழுவைப் படகுகளை கைப்பற்றியுள்ளதுடன், 252 இந்திய மீனவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கைக்காக அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த மீனவர்களை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

## மாணவர்களுக்கான 80 வீத...

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், எரிபொருள் பிரச்சினை, கொவிட் தொற்றுப்பரவல் போன்ற பல்வேறு காரணங்களினால் கடந்த காலங்களில் இடம்பெற்ற போக்குவரத்து நெருக்கடியின் மத்தியில் பாடசாலைக்கு வருகை தர முடியமால் சிக்கலுக்குள்ளான மாணவர்களுக்கு நிவாரணமளிக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென கல்வி அமைச்சருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுதொடர்பில் கல்வி அமைச்சர் சரியான தீர்மானத்தை எடுப்பார். பாடத்திட்டத்தை உள்ளடக்கும் வகையில் மாணவர்களின் பாடசாலை வருகை வீதத்தை அதிகரிப்பதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக மாணவர்களுக்கு அநீதி ஏற்படுமா என்ற விடயத்தை அமைச்சரின் கவனத்துக்கு உட்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மனிதக் கடத்தல் விவகாரம்...

ஓமான், மஸ்கட் நகரிலிருந்து நேற்று (29) அதிகாலை 3.58 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த விமானத்தினூடாக நாட்டுக்கு வருகை தந்திருந்தபோது குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரை கைதுசெய்வதற்காக குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் நேற்று முன்தினம் (28) நீதிமன்றத்திடம் பிடியாணை உத்தரவை பெற்றுக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்தேகநபர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தாலும், அவர் ஓமானிலுள்ள இலங்கை தூதரகத்தில் தங்கியிருந்துள்ளதுடன், இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கும் அவர் இடையூறு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, சந்தேகநபரான குஷான் நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திருந்த நிலையிலேயே எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## ஊசி மூலம் போதை...

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிறுவன் ஊசி மூலம் போதைப் பொருட்களை நுகர்வதாக தெரியவந்துள்ளது. அவ்வாறு ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றியபோதே கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி சிறுவன் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் போதைப் பொருளை ஊசி மூலம் நுகர்ந்ததால் கிருமித்தொற்று ஏற்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது.

## மீண்டும் பரவும்...

இதுகுறித்து டொக்டர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள் தாம் கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார நடைமுறைகளை சட்டரீதியாக கட்டாயப்படுத்தும் வரை காத்திராமல் முறையாக பின்பற்றுவதன் மூலம் தமது குடும்பத்தினரின் உயிர்களை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

எனவே, கொரோனா பெருந்தொற்று காலத்தின்போது கடைப்பிடித்த சுகாதார நடைமுறைகளான வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது முகக்கவசம் அணிதல், குறைந்தபட்சம் ஒருமீற்றர் என்ற சமூக இடைவெளியை பேணல், சவர்க்காரம் அல்லது கிருமிநாசினி பாவித்து கைகளை சுத்தம் செய்தல் போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் பேரழிவை தவிர்க்கலாம். - என்றார்.

இதேவேளை, இந்நாட்களில் இலங்கைக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. சுற்றுலா வழிகாட்டிகள் முதல் சுற்றுலா ஹோட்டல் பணியாளர்கள் வரை சுற்றுலாப்பயணிகளுடன் நேரடித் தொடர்பிலுள்ள அனைத்து தரப்பினரும் கொரோனா வைரஸ் தடுப்பு சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்போது கொரோனாவால் உயிரிழப்போரில் பெரும்பாலானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதால், தங்களின் வீடுகளிலுள்ள முதியோர்கள் கொரோனாவால் பலியாவதைத் தடுப்பது அனைவரின் பொறுப்பாகும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆட்கடத்தலின் மத்திய நிலையமாக லெபனான்

### இத்தாலிக்கு அழைத்துச் செல்லும் மோசடி குறித்து தகவல் அம்பலம்

லெபனானை மனிதக் கடத்தல் பரிமாற்ற மையமாகக்கொண்டு சட்டவிரோதமான முறையில் இலங்கையர்களை இத்தாலிக்கு அழைத்துச் செல்லும் மோசடி தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாக பணியகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற முறையில் இத்தாலி நோக்கிச் சென்ற பல படகுகள் விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் சிக்கியவர்களில் இலங்கையர்களும் அடங்குவர்.

சட்டவிரோதமான படகு பயணத்தினூடாக ஆபத்துகளில் சிக்கும் இலங்கையர்கள் குறித்து லெபனானிலுள்ள இலங்கை தூதுவராலயம், இலங்கை வெளிநாட்டுப் பணியகத்துக்கு அறித்துள்ளது.

இவ்வாறான ஆட்கடத்தல்களை மேற்கொள்பவர்கள் குறித்து தகவல்கள் இருப்பின், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டுக்குச் செல்லும்...

மேலும், சுகாதார அமைச்சின் அனுமதியின்றி வெளிநாடு செல்லும் வைத்தியர்களுக்கு விசா வழங்க வேண்டாம் என்று சகல துதுவ காரியாலங்களுக்கும் அறிவிக்கவும் விமான நிலையத்தினூடாக வெளியேறும்போது விடுமுறைக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதை பரிசோதனைக்கு உட்படுத்த குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்கவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (26) இடம்பெற்ற 2023 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

அரச நிர்வாக அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றிக்கையின் பிரகாரம் வைத்தியர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வைத்தியர்கள் வெளிநாடு செல்வதானால், முறையான செயன்முறைகளினூடாக அனுமதிபெற்றதன் பின்னரே நாட்டிலிருந்து வெளியேற வேண்டும்.

வைத்திய அதிகாரிகள் நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகளுக்கு உட்பட்ட நிறைவேற்று பிரிவுக்கு உட்பட்ட அதிகாரிகள் என்பதால், அவர்கள் பிரதமரின் அனுமதியுடனேயே வெளிநாடு செல்ல வேண்டும். அவ்வாறு, பிரதமரின் அனுமதியின்றி வெளிநாடு சென்றால் அது சட்டபூர்வமாக இடம்பெயர்வாக கருதப்படமாட்டாது என்பதால், சட்டபூர்வமாக செயற்பட்டு சேவையை விட்டு வெளியேறுவதாக அறிவிக்கப்படும்.

அந்த அறிக்கை, அரச நிர்வாக அமைச்சினூடாக இடைக்கிடை வெளியிடப்படும் என்பதுடன், இவ்வாறு வெளியேறியுள்ள வைத்தியர்களின் வைத்திய சபையிலுள்ள பதிவை நீக்குவதற்கான வாயப்புகளும் இருக்கின்றன. அவ்வாறு இல்லாவிட்டால் வெளிநாட்டு மருத்துவ சபைகளில் பதிவை பெற்றுக்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

தற்போது அரசாங்கத்தால் எடுக்கப்பட்டுள்ள கொள்கை தீர்மானத்துக்கமைய வைத்திய அதிகாரிகளால் ஐந்து வருடத்துக்கு தொழிலாற்ற முடியும். அதற்கமைய, சட்ட அனுமதியுடன் வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன், எதிர்காலத்திலும் வைத்தியர்கள் இவ்வாறு வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். இனிவரும் காலங்களில்வெளிநாடு செல்லும் வைத்ஸியர்களின் வெளியேற்ற நடவடிக்கைகள் முறையான சட்டத்திட்டங்களுக்கமையவே முன்னெடுக்கப்படும்.

அதற்கமைய, எந்வொரு முன்னறிவித்தலுமின்றி அல்லது பதவியை இராஜினாமா செய்துவிட்டு வெளிநாடுகளுக்கு செல்லும் வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவ்வாறு சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் முறையான அனுமதியின்றி வெளிநாடு செல்லும் வைத்தியர்களுக்கு மேற் குறிப்பிட்டதுபோன்று, பணியை கைவிட்டு சென்றதான அறிவிக்கும் அறிக்கையை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், சுகாதார அமைச்சின் அனுமதியின்றி வெளிநாடு செல்லும் வைத்தியர்களுக்கு விசா வழங்க வேண்டாம் என்று சகல துதுவ காரியாலங்களுக்கும் அறிவிக்கவும், விமான நிலையத்தினூடாக வெளியேறும்போது விடுமுறைக்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதை பரிசோதனைக்கு உட்படுத்த குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## மாவட்ட அபிவிருத்தி...

தெரிவித்ததையடுத்து அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அந்த விடயத்துக்கு இணங்குவதாக தெரிவித்தார். 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, மாவட்ட அபிவிருத்தி சபைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

"நாட்டில் தொடர்ச்சியாக பிரச்சினைகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்காமல் நாம் அனைவரும் இணைந்து காலத்துக்குப் பொருத்தமான வகையிலான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுவதன் ஊடாக செலவினங்களை குறைத்துக் கொள்ள முடியும். அத்துடன் பல்வேறு நன்மைகள் அதனூடாக ஏற்படும்.

இது தொடர்பில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் கலந்துரையாடி ஆரோக்கியமான முறையில் அடுத்தகட்டத்தை நோக்கி நகர வேண்டும். நாடு பொருளாதார ரீதியில் பெரும் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள நிலையில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பொருத்தமானதாக இருக்கும்" - என மைத்ரிபால சிறிசேன சபையில் தெரிவித்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில், மாவட்ட அபிவிருத்தி சபைகளை உருவாக்குவதற்கு இணங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

ஜனாதிபதியின் அறிவிப்பை வரவேற்பதாகவும் அவ்வாறானதொரு செயற்பாடு முன்னெடுக்கப்படும்பட்சத்தில் தமது கட்சியின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் மைத்ரிபால சிறிசேன இதன்போது உறுதியளித்தார்.

இதேவேளை, அதற்குப் பின்னர் சபையில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

தேரர் சங்கத்தின் தர்மத்தின்படி நடந்துகொள்ளாவிடின், பிரச்சினைகள் ஏற்படும் என்றும் இந்தநிலை, கௌதம புத்தரின் காலத்திலிருந்து தொடர்வதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேரர் சங்கத்தினரின் ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாக்க மகா சங்கத்தினருக்கு அதிகாரம் வழங்கப்படுவது குறித்த கருத்தாடலை ஏற்படுத்தும் சட்டமூலத்திற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

**தேரர்களா? போலிக் காவிகளா?**

"பல்கலைக்கழகத்தில் இருக்கும் தேரர் ஒருவர் மல்வத்து அல்லது அஸ்கிரிய பீடாதிபதியை குறைகூறுகிறார், விமர்சிக்கிறார். யார் இவர்கள் என்ற கேள்வி எங்களுக்கு ஏற்படுகிறது. இவர்கள் தேரர்களா அல்லது போலிக் காவிகளா என்று கேட்க நேரிடுகிறது.

காவியை அணிந்துகொண்டு தர்மத்திற்கு எதிராக செயல்பட்டு, விசேட பாதுகாப்பை அவர்கள் பெறமுடியாது. எனவே, இந்த சட்டமூலம் அவசியமானது. இந்த விடயங்கள் குறித்து ஆழமாக பேசவேண்டியிருக்கிறது. உண்மையைப் பேசுவோம். ஏராளமானோர் தேரர்களாக பல்கலைக்கழகத்திற்குள் வருகின்றனர். பல்கலைக்கழக நிறைவின்போது அவர்கள் தேரர்களாக வெளியேறுவதில்லை. ஒரே தீர்மானத்தில் இருக்கவேண்டும். துறவறத்தில் வந்தால் துறவறத்தில் நீடிக்க வேண்டும்.

**இந்து மதத்தின் தனித்துவம் குறித்து அறிக்கை**

இந்தியாவில் உள்ள இந்து மதத்தைவிட இலங்கையில் உள்ள இந்து மதத்தின் தனித்துவம் குறித்து ஓர் அறிக்கையை தொகுக்குமாறு அமைச்சரைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனைய கட்சிகள் இதற்கு உதவ முடியும். வட இந்தியாவிற்கும், தென் இந்தியாவிற்கும் உள்ள வித்தியாசத்தையும் நீங்கள் காணலாம். இது நாம் செய்யவேண்டிய ஒன்று. அதேபோல், இலங்கை வரலாற்று ஆய்வு நிறுவனமொன்றை ஸ்தாபிக்க வேண்டும். நாம் வரலாற்றை மறந்துவிடுகிறோம். எனவே, வரலாறு குறித்த அறிவையும், ஆராய்ச்சியையும் முன்னெடுப்பதற்காக இந்த நிறுவனம் செயற்பட வேண்டும். மகா வம்சத்துடன் நாம் அறிந்த வரலாற்றில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மகா வம்சத்தில் உள்ள திகதிகளை மாற்ற முடியாது. மகா வம்சத்திலும் ஒரு தரப்பினரின் கருத்துகளே இருக்கின்றன. வெளியே வேறு கருத்துகளும் இருக்கின்றன. இவற்றை கருத்திற்கொண்டு இலங்கை வரலாற்று ஆய்வு நிறுவனமொன்றை ஏற்படுத்த வேண்டும்.

**மருத்துவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதால் பிரச்சினை**

மருத்துவ விஞ்ஞான பீட மாணவர் ஒருவருக்கு சுமார் 60 லட்சம் ரூபா வரை செலவிடுகிறோம். இலங்கையில் இருப்பதற்காகவே இவ்வளவு செலவிடுகிறோம். ஆனால், அவர்கள் வெளிநாடு செல்கின்றனர். இது மிகப்பெரிய பிரச்சினையாகும்."

- இவ்வாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பொத்துவில் வைத்தியசாலை...

பல்வேறு நெருக்கடி நிலைமைகளின் மத்தியிலேயே வைத்தியர்கள் தமது கடமைகளை முன்னெடுத்து வருகிறார்கள். கிழக்கு மாகாணத்திலுள்ள இலட்சக் கணக்கான மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வரும் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துவரும் வைத்தியசாலையாக மாறியுள்ளது.

மருத்துவமனையில் நிர்வாகத்தின் பலவீனத் தன்மை மற்றும் அங்கு நிலவும் பிரச்சினைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் அவற்றை உதாசீனப்படுத்துதல், கவனமின்மை போன்ற காரணங்களினால் பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் நோயாளர் சிகிச்சைப் பிரிவை முன்னெடுக்கும் செயற்பாடுகள் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளன.

மேலும், பொறுப்பற்ற மற்றும் பலவீனமாக மருத்துவமனை நிர்வாகத்தால் வைத்தியசாலை நடவடிக்கைகளை ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், மருத்துவமனை மீதுள்ள தவறான நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுக்கள், மருத்துவ அதிகாரி அந்த பிரதேசத்தை அண்மித்துள்ள தனியார் வைத்தியசாலைகள் முன்னெடுக்கப்படுவதால் நிர்வாக மட்டத்திலான முரண்பாடுகள், வைத்திய அதிகாரியின் நடத்தை கோளத்தினால் மருத்துவமனைக்குள் வைத்தியர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உருவாகியுள்ளமை, வைத்திய அதிகாரி மீதான முறைப்பாடுகளை வெளிப்படுத்திய வைத்தியர்களுக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்றுபடுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் நோயாளர் சிகிச்சை சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் மருத்துவ சேவையின் தரமும் கேளவிக்குறியாகியுள்ளது. இந்த வைத்தியசாலையின், வைத்திய அதிகாரிக்கு எதிராக குரசல் எழுப்பிய வைத்தியர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய, குறித்த வைத்திய அதிகாரிக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்வரை, தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து, தற்காலிகமாக சேவையிலிருந்து நீங்க அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் கடந்தவாரம் தீர்மானம் எடுத்திருந்தனர்.

இதன் காரணமாக பொத்துவில் ஆதார வைத்தியசாலை முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்த பிரச்சினை தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அவதானமின்றி செயற்படுவதனூடாக ஆபத்து நிலையிலிருக்கும் நோயாளர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் நெருக்கடிக்குள்ளாகிவரும் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவை தொடர்பில சுகாதார அமைச்சு முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## பால்மாவுக்கு தட்டுப்பாடு...

சுகாதார அமைச்சு மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுகள் மீதான வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பால்மா தொகையை சுங்க அதிகாரிகளின் முறையான பரிசோதனைக்குட்படுத்தி இன்னும் ஒருவார காலத்துக்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 4 இலட்சம் கிலோகிராம் பால்மா உரிய நேரத்தில் இறக்குமதி செய்யப்படாமல் பாவனைக்குத் தகுதியற்றதாக மாறியுள்ளது என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் முன்வைத்த குற்றச்சாட்டை சுங்கத் திணைக்களம் மறுத்துள்ளது.

அந்த சங்கத்தில் அங்கம் வகிக்கும் தனியார் நிறுவனமொன்றின் தலைவர் லக்ஷ்மன் வீரசூரிய அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, நாட்டில் பால்மா தட்டுப்பாட்டினை ஏற்படுத்தி மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் வஞ்சகமான திட்டம் அமுல்படுத்தப்படுவதாக குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்கு பதிலளித்த சுங்கத் திணைக்களம், லக்ஷ்மன் வீரசூரியவுக்குச் சொந்தமான நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 6 பால்மா கென்டைனர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கடந்த 14ஆம் திகதி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்த இறக்குமதியானது உரிய விதிமுறைகளுக்கு முரணான சட்டவிரோத இறக்குமதி என மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் உறுதிப்படுத்தியதன் காரணமாக சுங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பால்மா இறக்குமதிக்கு தடை விதிக்கப்படாததால் நாட்டில் ஒருபோதும் பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் அந்நிய செலாவணியைச் தக்கவக்க வேண்டிய இவ்வாறாண தருணத்தில், இதுபோன்ற செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கது. பால்மா என்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட பொருட்களை விடுவிக்காது இதுதொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளதோடு குறுகிய காலத்துக்குள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## நிதி திரட்ட முடியாத...

பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (29) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறான அரசியல்வாதிகளால் தீர்வு கொடுக்க முடியாத நெருக்கடிமிக்க பொருளாதார சூழ்நிலையே தற்போது நிலவுகிறது. அரசின் வருமானத்தை முடிந்தளவு அதிகரித்தல், அரச செலவுகளை முடிந்தளவு மட்டுப்படுத்தல், அதனூடாக வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் மற்றும் வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்து நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் வருமானத்தை மட்டுப்படுத்தல் போன்றவற்றினூடாகவே இதற்கு தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

இவற்றில் ஒரு முறையினூடாகவே வரி சட்ட மூலம் திருத்தப்பட்டு வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வரி அதிகரிப்பினால் ஒவ்வொரு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நிதி அமைச்சு உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்திடம் கூட அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன. எனவே, எதிர்காலத்தில் அமைச்சரவையில் இதுதொடர்பில் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

எனவே, பல்வேறு முறைகளில் வருமானத்தை அதிகரித்துக்கொண்டாலும் எமது பிரதானமான இரு செலவுகளையும் மட்டுப்படுத்த முடியாது. அதாவது, அரசபணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் பெற்றுக்கொண்ட அரச கடன்களுக்காக வட்டி மீள் செலுத்துகையை போன்ற இரண்டுக்கான நிதியை திரட்டவே முடியாது. இதற்கு முன்னர் பெற்றுக் கொண்ட கடனை மீளச்செலுத்த முடியாமல் போயுள்ளதால் கடந்த காலத்தைபோன்று மீண்டும் கடனும் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே இந்த நிலைமை குறித்து பரந்துபட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.

# மீன்பிடி – விவசாய நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க உறுதிமொழி

## கடற்றொழில் அமைச்சரின் கோரிக்கைக்கு சீனத் தூதுவர் பச்சைக்கொடி

கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இலங்கைக்கான சீனத் துதுவரினால உறுதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொழில் நடவடிக்கைகளுக்கு கணிசமானளவு மண்ணெண்ணெய் தேவைப்படுகின்றமையினால், மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குவதற்கும் சீனா முன்வர வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சீனாவினால் வழங்கப்பட்ட, அண்ணளவாக சுமார் 90 இலட்சம் லீற்றர் டீசலை சம்பிரதாயபூர்வமாக பெற்றுக்கொண்ட நிலையில், கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதற்கு இலங்கைக்கான சீனத் துதுவர் குய் சென் ஹாங் உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தில் டீசலை சம்பிரதாயபூர்வமாக பெற்றுக்கொள்ளும் நிகழ்வில், கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,





"சீன அரசாங்கம் தற்போது 90 இலட்சம் லீற்றர் டீசலை வழங்கியுள்ளமை எமது மக்களுக்கு பேருதவியாக அமைந்துள்ளது.

சீனா வழங்கியுள்ள இந்த உதவிக்காக சீன அரசாங்கத்திற்கும் சீன மக்களுக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பில் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது கிடைத்துள்ள 90 இலட்சம் லீற்றர் டீசலில் ஒரு பகுதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வழங்கி அவர்களிடம் இருந்து மண்ணெண்ணெயைப் பெற்று மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" எனவும் தெரிவித்தார்.

# அரசியல் தீர்வில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைவை வரவேற்கிறோம்

## வடக்கு - கிழக்கின் கொழும்பு ஒன்றியம் தெரிவிப்பு

அரசியல் தீர்வு விடயத்தில் யதார்த்தபூர்வமானவற்றை வலியுறுத்தி ஜனாதிபதியுடன் பேச தமிழ்க் கட்சிகள் முன்வந்திருப்பதை வரவேற்பதாக வடக்கு - கிழக்கின் கொழும்பு ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கை பிரதிநிதிப்படுத்தும் கட்சிகள் தங்களுக்குள் ஒரு பொது உடன்பாட்டுடன் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு விடயத்தில் செயற்பட முயற்சிப்பது காலத்தின் கட்டாயம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் கொழும்பு ஒன்றியம் சார்பாக கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் முன்னாள், இன்னாள் மாகாண சபை, கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி சார்பான கொழும்புவாழ் தமிழ் அரசியல் பிரமுகர்கள், குறிப்பாக மூத்த அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

மேலும், வடக்கு - கிழக்கின் கொழும்பு ஒன்றியம் மீண்டும் ஒருமைப்பாட்டுடனும் மிடுக்குடனும் தனிப்பட்ட கட்சி சார்புகளுக்கப்பால் மேல் மாகாணத்தில் தமது வடக்கு - கிழக்கின் தனித்துவ பிரதிநிதித்துவத்தை நிறுவும் வகையிலும் செயற்படும் என்ற தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தத்தமது அரசியல் தளங்களில் பயணித்தவாறு மேல் மாகாணத்தில் எமது சமூகம் சார்ந்த அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளை ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் எடுத்து விளக்குவதென்றும் தீர்மானித்துள்ளனர் என அவர்களது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கின் கொழும்பு ஒன்றியத்தின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்தி அதனுடைய அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என இதில் கலந்துகொண்ட அனைவரும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பழனி முருகனை தரிசித்த வடக்கு ஆளுநர் ஜீவன்

இந்தியா சென்றுள்ள வட மகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பழனி முருகன் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் கலந்துகொண்டுள்ளார்.

இந்தியாவில் இடம்பெறும் இளம் தொழில் முனைவோர் மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக விசேட அழைப்பின் பேரில் ஆளுநர் இந்தியா சென்றார்.

இந்நிலையில், முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாக கருதப்படும் பழனி முருகன் ஆலயத்திற்கு சென்ற ஆளுநர் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டார்.



# மின் மோட்டார்களைத் திருடிய மூவர் சுன்னாகத்தில் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள பண்ணையொன்றில் ரூ. 4 இலட்சம் பெறுமதியான நீர் இறைக்கும் இரண்டு மின் மோட்டார்களை திருடிய குற்றத்தில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட மோட்டார்களும் மீட்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் ஈவினை பகுதியிலுள்ள பண்ணையொன்றில் இருந்து ரூ. 4 இலட்சம் பெறுமதியான நீர் இறைக்கும் இரு மின் மோட்டார்கள் களவாடப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், ஈவினை பகுதியைச் சேர்ந்த 18, 21 மற்றும் 25 வயதுடைய மூன்று இளைஞர்களை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், திருடப்பட்ட இரண்டு மின் மோட்டார்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.





உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8,000 இலிருந்து 4,000 ஆக குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, நியமிக்கப்பட்டுள்ள தேசிய எல்லை நிர்ணயக் குழுவிற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அவசியமான பரிந்துரைகளைச் செய்வது தொடர்பில், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் ஆகியோருக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) ஓட்டமாவடி, காவத்தமுனையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளைக் காணலாம்.

# நிபந்தனையற்ற பேச்சுகளுக்குத் தமிழ்க் கட்சிகள் செல்லக் கூடாது

## தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்து

தமிழர் விடுதலைக் கூட்டணி
Tamil United Liberation Front

Thanthai Selva Agam,
1077, K.K.S. Road, Jaffna
303 813
TP: 021 222 3631
171

President: Paramasivam Sritharan 0777
Secretary General: V. Anandasangary 0777 890

இணைப்பாட்சி அடிப்படையிலான அரசொன்றைத் தமிழர்களின் மரபுவழித் தாயகத்தில் அமைப்பதற்கான ஒரு முதற் கட்ட இணக்கப்பாட்டை அரசு வெளிப்படுத்தாதவரை தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைக்குச் செல்லக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு என்று தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,

மீண்டும் ஒரு முறை தமிழ்க்கட்சிகள் அரசுடன் ஒரு நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயாராகி வருகின்றன.

பிள்ளையைப் பெற முடியாது என்று தெரிந்துகொண்டும் மீண்டும் மீண்டும் அரசுடன் தேன் நிலவுக்குச் சென்று வெறும் கையுடன் திரும்பி வந்து தம்மையும் ஏமாற்றி எம் மக்களையும் அவமதிக்கும் செயல் தேவைதானா?

தமிழர்களுடைய உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது இளைஞர்களும் யுவதிகளும் எம்மினத்தின் எதிர்காலத்துக்காகத் தமது உயிர்களை விதைத்திருக்கிறார்கள்.

அவர்களுடன் 200 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களும் தமது உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். பல கோடி பெறுமதியான சொத்துகளையும் நாம் இழந்திருக்கிறோம். எமது உறவுகள் உலகம் முழுவதும் சிதறுண்டு போய் இருக்கிறார்கள்.

இப்படியான இழப்புகளுடன் கூடிய ஒரு இனத்தின் சார்பில் இதனுடன் சம்பந்தமே இல்லாத ஒரு பிரிவினரும், இதன் வலிகளைப் புரிந்து கொள்ளாத ஒரு பிரிவினரும் வலி சுமந்த தமிழர்கள் சார்பில் முடிவுகளை எடுத்து அவர்கள் மேல் சுமத்தும் முயற்சிகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது.

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி அதிகாரமுள்ள இணைப்பாட்சி அடிப்படையிலான அரசொன்று தமிழர்களின் மரபுவழித் தாயகத்தில் அமைப்பதற்கான ஒரு முதற்கட்ட இணக்கப்பாட்டை அரசு வெளிப்படுத்தாதவரை தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைக்குச் செல்லக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு - என்று கூறப்பட்டுள்ளது.

# முஸ்லிம் விவகாரத் திணைக்களப் பணிப்பாளரின் பதவியை நீடியுங்கள்

## முஸ்லிம் எம்.பிக்கள் அரசிடம் கோரிக்கை

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியில் இப்றாஹிம் அன்ஸாரைத் தொடர்ந்தும் நீடிக்கச் செய்யுமாறு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கோரிக்கைக் கடிதமொன்று பிரதமர் தினேஷ் குணர்வதனவிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமத், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசீம், எச்.எம்.எம். ஹரீஸ், எம்.எஸ். தௌபீக், இஷாக் ரஹ்மான், எஸ்.எம்.எம். முஷாரப், அலி சப்ரி றஹீம் மற்றும் மர்ஜான் பழீல் ஆகியோரே இக்கோரிக்கை கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த பதவிக்கு புதியவரை நியமிப்பதற்கான விண்ணப்பம் ஏற்கனவே பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் கோரப்பட்டு சிலரும் விண்ணப்பித்துள்ளனர்.

இந்நிலையிலேயே முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியில் இப்றாஹீம் அன்ஸாரை தொடர்ந்தும் நீடிக்கச் செய்வதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

60 வயதை பூர்த்தி செய்த அனைவரும் எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும்.

20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசின் அடிப்படையில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஆறு மாத காலப் பகுதிக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக இப்றாஹீம் அன்ஸார் கடந்த 2021.10.21ஆம் திகதி நியமிக்கப்பட்டார். எனினும், இவருக்கு வழங்கப்பட்ட பதவி நீடிப்பு எதிர்வரும் டிசம்பர் மாத நடுப் பகுதியில் நிறைவடைகின்றது.

# அரசியலமைப்புச் சபைக்கு காரியவசம் நியமனம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அரசியலமைப்பு சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக சாகர காரியவசம் எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 10 உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்பு சபை நிறுவப்பட்டது. பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் பொறுப்பு அரசியலமைப்பு சபையைச் சேர்ந்ததாகும்.







கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய ஆசிரியர்கள் சங்கத்தின் வருடாந்த கூட்டம் ராஜகிரியவில் ஓய்வுபெற்ற ஆசிரியர் எம்.எச்.எம்.பாரூக் தலைமையில் நடைபெற்றது. இச்சங்கத்தில் 400 ஆசிரியர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கான மருத்துவம், காப்புறுதி, ஒன்றுகூடல், கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம், ரோயல் கல்லூரியில் கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் போன்ற நிதியுதவிகளை இச்சங்கம் செய்து வருகின்றது. அத்துடன் இந்நிகழ்வில் பழைய மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்கான நிதியுதவிகளை வழங்கி வைத்தனர். காப்புறுதி நிறுவனம் 15 ஆசிரியர்களுக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பரிசு வவுச்சர்களையும் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (அஷ்ரப் ஏ.சமத்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 30ஆம் திகதி, புதன்கிழமை

# கவனிக்கப்படவேண்டிய யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு

மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வேண்டாமென யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள், சீன அரசாங்கத்தினால் சீன விவசாயப் பல்கலைக்கழகத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கை அரசாங்கத்தின் மறைமுக ஆதரவுடன் நவம்பர் 25 அன்றைய தினம் கையொப்பமிட இரகசிய ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை ஊடகங்களில் அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் எங்களின் நிலத்தை அபகரிக்கும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரலை அறிந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு துணிச்சலாக மறுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவுக்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

ஐ.நா.சபையின் அறிக்கையின் பிரகாரம், இன அழிப்பு யுத்தத்தின் இறுதி ஆறு மாத காலப் பகுதியில் மட்டும் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதோடு, நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் இலங்கை ஆயுதப் படையினரால் பலாத்காரம் செய்யப்பட்டனர். குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமலாக்கப்பட்டனர்.

சீனா, அனைத்தையும் நன்றாக அறிந்திருந்தும் தமிழர்களை தொடர்ந்து அவமானப்படுத்துவதையும், சர்வதேச அரங்கில் தமிழர்களுக்கு நீதி கிடைக்காமல் தடுப்பதையும் வழக்கமாக கொண்டதுடன், போர்க்குற்றவாளிகளை ஆதரித்தும் இலங்கையை கடன்பொறியில் சிக்க வைத்து அச்சுறுத்தியும் இலங்கையை கைப்பற்றும் அதன் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகிறது.

தமிழர் விரோத மனப்பான்மை கொண்ட சீனா வடக்கிலும் கிழக்கிலும் தனது செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும் தீய நோக்கத்துடன் எமது கடற்பரப்பையும் நிலத்தையும் அபகரித்து எமது பாரம்பரிய மண்ணில் எம்மை அகதிகளாக்கி இனப்படுகொலை செய்யும் முயற்சிகளை நாம் ஏற்கனவே கண்டித்திருந்தோம்.

தீங்கு விளைவிக்கும் கடலட்டைப் பண்ணைகள் என்ற போர்வையில் சீனா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏற்கனவே எமது கடற்பரப்பின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து, எமது மீனவர்களிடையே பிளவை உருவாக்கியுள்ளது.

தற்போது சீனா வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள வளமான விவசாய நிலங்களை, தமது நாட்டில் பத்து ஆண்டுகளில் ஏற்படவிருக்கும் மிகக் கடுமையான உணவுப் பஞ்சத்தை சமாளிக்கும் பொருட்டு தீய எண்ணத்துடன் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சீனா, இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களுடன் கூடிய மலக்கழிவுகளை உரமாக வழங்கியதாகவும், இலங்கைக்கு மில்லியன் கணக்கான ரூபாவை செலுத்துமாறு நிர்ப்பந்தித்ததாகவும் கூறப்படுகிறது. சீனாவில் வரவிருக்கும் உணவு நெருக்கடியை சமாளிக்க எமது வளமான விவசாய நிலங்களை சீனா எவ்வாறு கைப்பற்றி எம்மை அடிமையாக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

வெளிப்படைத்தன்மையற்ற மற்றும் சாத்தியமற்ற சீனக் கடன்கள் மூலம் இலங்கை தற்போதைய நிலைமைக்கு வந்துள்ளது என்பது தெளிவாகிறது. இலங்கையின் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களுக்கு ஜப்பானும் இந்தியாவும் ஆதரவளித்துள்ள போதிலும், கடன்களைப் பரிசீலிக்கும் தற்போதைய பேச்சுவார்த்தைகளில் கூட சீனாவின் மறுநிதியளிப்புத் திட்டத்தில் தொடர்ந்து இருந்து வருவது, இலங்கையில் மீண்டும் பேரழிவை ஏற்படுத்தும் சீனாவின் மறைமுக நிகழ்ச்சி நிரல் இலங்கையின் சமீபத்திய வரலாற்றிலிருந்து தெளிவாகக் அறிய முடிகிறது.

சீனாவின் அணுகுமுறையின் அடிப்படையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வளமான விவசாய நிலங்களையும் கடற்பரப்பையும் சீனாவுக்கு விற்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சீனாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாக நாங்கள் சந்தேகிக்கிறோம். எமது நிலங்களையும் கடற்பரப்பையும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக சீனாவிற்கு விற்க பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசாங்கம் செய்து வருகிறது.

அரசியல் நிர்ப்பந்தத்திற்காக எமது நிலத்தையும் கடற்பரப்பையும் வேறு நாடுகளுக்கு விற்க வேண்டாமென இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதுடன், நமது கடற்பரப்பையும் நிலத்தையும் காப்பாற்றக் குரல் கொடுக்குமாறு சிவில் சமூகங்கள் மற்றும் அனைத்து மக்களிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இந்தக் கடமையிலிருந்து தவறுகின்ற பட்சத்தில், எதிர்காலத்தில் நாமனைவரும் எம்முடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்படுவோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் சீனா உட்பட்ட நாடுகள் முதலீடுகள், அபிவிருத்தி என்ற போர்வையில் உள்நுழைய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கும் நிலையில், மேற்படி அறிக்கை மிக முக்கியமான ஒன்றாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இந்தக் கருத்துகளில் உள்ள தாற்பரியத்தை, யதார்த்தத்தை இலங்கை அரசாங்கம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

பிராந்தியத்தில் தீவிரமான ஆதிக்கத்தை செலுத்த முயலும் சீனா அதற்கு இலங்கையை வெகுவாக பயன்படுத்த முயற்சிப்பது இரகசியமல்ல. ஆனால்,அந்த செயற்பாடுகளுக்கு தமிழர் பகுதிகளை கண்வைத்து ஊடுருவுவது என்பது பாரதூரமான விடயமாகும். யாழ்ப்பாணக்குடா நாடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி. யாழ்.குடா நாட்டின் ஊடாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்க முடியும். ஏற்கனவே பல முனைகளில் பல்வேறு வடிவங்களில் குடாநாட்டுக்கு சீனா ஊடுருவ முயற்சிப்பது இந்தியாவை மனதில் வைத்துத்தானா என்ற கேள்வி தமிழர் மனங்களில் எழுவதில் நியாயம் இல்லாமலில்லை. இந்தப் பின்னணியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாட்டை அரசு கவனத்திற்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தி தெரிவிக்க விரும்புகிறோம்.

# தேர்தல் மூலமாகவே ஆட்சிமுறையில் நம்பகத்தன்மையை ஏற்படுத்தமுடியும்!

அரசாங்கத்தை மாற்றுவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு போராட்டத்தையும் தேசிய அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து இராணுவத்தைப் பயன்படுத்தி ஒடுக்கத் தயாராயிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் செய்த அறிவிப்பு அவர் எந்தளவு நெருக்குதலின் கீழ் இருக்கிறார் என்பதை வெளிக்காட்டுகிறது. போராட்ட இயக்கத்தை கையாள்வதற்கு அவர் பாதுகாப்புப் படைகளை பயன்படுத்திய பாங்கு எதிர்பார்க்கப்படாததாகும். அவரது தற்போதைய சொல்லும் செயலும் முன்னர் ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்தபோது எடுத்த நிலைப்பாடுகளுக்கு முரணானவையாக இருக்கின்றன.

தேர்தல்களில் அவருக்கும் அவரது கட்சிக்கும் தொடர்ச்சியாக வாக்களித்த இன, மத சிறுபான்மையினங்களின் விடயத்தில் இது குறிப்பாக உண்மையாகும். அவரது அரசாங்கங்களின் கீழ் அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதாக உணர்ந்தார்கள். அந்த அரசாங்கங்கள் அடாவடித்தனமான அரச அடக்குமுறையைக் கையாளவில்லை. சிறுபான்மையினங்களுக்கு அவர் பெருமளவு வாக்குறுதிகளைக் கொடுத்தார். என்றாலும், அவற்றை அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் துரதிர்ஷ்டவசமான ஆரவாரப் பேச்சுக்களுக்கும் செயல்களுக்கும் மத்தியிலும் கூட அவரே இருக்கக்கூடிய சிறந்த தெரிவு என்ற நம்பிக்கை உள்ளது. ஜனாதிபதியின் அண்மைய அறிவிப்புகள் இன,மத சிறுபான்மையினங்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பார் என்ற எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் மீண்டும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த பிரச்சினையை அடுத்த சந்ததிக்கு விட்டுவிட தான் விரும்பவில்லை என்று அவர் கூறியிருக்கிறார். நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் தேசியப் பிரச்சினையை நாடு அதன் 75ஆவது சுதந்திர தினத்தை அடுத்தவருடம் பெப்ரவரி 4 கொண்டாடும்போது தீர்த்துவைக்க விரும்புவதாக அவர் கூறியிருக்கிறார்.

தங்களது பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி புதிய முயற்சிகளை முன்னெடுப்பார் என்ற நம்பிக்கையில் பிரதான தமிழ்க்கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் வரவு- செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டது. ஒப்பீட்டளவில் சிறியளவு பெரும்பான்மை வாக்குகளினால் அது நிறைவேற்றப்பட்டது. வரவு- செலவுத்திட்டத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற போதிலும் ஜனாதிபதி நேசக்கரம் நீட்டியிருப்பதால் அதை எதிர்த்து வாக்களிக்கவில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றத்தில் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி இன,மத சிறுபான்மையினங்களுக்கு வார்த்தைகளில் மாத்திரம் நேசக்கரத்தை நீட்டவில்லை. இவ்வருடத்தைய மாவீரர் தினக் கொண்டாட்டங்களின்போது எந்த சம்பவமும் இடம்பெறவில்லை என்று வடக்கு, கிழக்கில் இருந்து வந்த செய்திகள் கூறுகின்றன. கடந்த இரு வருடங்கள் மாவீரர் தினக் கொண்டாட்ட நிகழ்வுகளில் பெருமளவில் பாதுகாப்புப் படைகளின் பிரசன்னம் காணப்பட்டதுடன், பலர் கைதுசெய்யப்பட்டார்கள். இம்முறை கொண்டாட்டங்களை தடுத்து நிறுத்துவதற்கு பாதுகாப்புப் படைகள் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினத்தை பல்கலைக்கழக மாணவர்கள் கேக் வெட்டி, இனிப்புப்பண்டங்கள் வழங்கிக் கொண்டாடினார்கள். இன, மத சிறுபான்மையினங்களை ஒழித்துக்கட்டிய ஹிட்லருடன் தனனை ஜனாதிபதி செய்த ஒப்பீடு பொருத்தமற்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள் விடுதலை செய்யப்பட்டமை நல்லிணக்க செயன்முறைகளுக்கு மேலும் பங்களிப்புச் செய்திருக்கிறது.

### மேலும் மோசமாகும் நெருக்கடி

இத்தகைய பின்புலத்தில், ஜனாதிபதியின் இராணுவவாத வார்த்தைப் பிரயோகங்கள் தணிவதற்கான அறிகுறிகளை காண்பிக்காதிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் தொடர்புபடுத்தியே விளங்கிக்கொள்ளமுடியும். பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எதிர்பார்க்கப்படும் கடனுதவி காலவரையறையின்றி தாமதிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆரம்பத்தில் அந்தக் கடனுதவி செப்டெம்பரில் கிடைக்கும் என்றும் பிறகு நவம்பரில் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப்போது ஜனவரியில் கிடைக்கலாம் என்று நம்பப்படுகிறது.

எகிப்து, ருமேனியா, இலங்கை, துருக்கி, செக் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் பெரும் நாணய நெருக்கடியில் சிக்கும் ஆபத்தில் தற்போது இருப்பதாக ஜப்பானின் முக்கிய முதலீட்டு வங்கியான நொமூரு ஹோல்டிங்ஸ் எச்சரிக்கை செய்திருக்கிறது. இந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருக்கிறது. அடுத்து இடம்பெறக்கூடிய ரூபா பெறுமதிக் குறைப்பு பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கும். அதன் விளைவாக மக்களினால் மேலும் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவு உயரும்.

பொருளாதார நெருக்கடியில் மேம்பாடு ஏற்படுவதற்கு முன்னதாக அது மோசமடையும் என்று ஜனாதிபதி ஏற்கெனவே கூறியிருக்கிறார். அது உண்மையில் மோசமாகிக்கொண்டு போவதை தகவல் அறிக்கை சான்றுகள் காட்டுகின்றன. தங்களது வகுப்புகளுக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் கால்வாசியால் குறைந்துவிட்டதாக சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கூறியிருக்கிறார்கள். நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வருகின்ற மாணவர்களினால் உணவுச் செலவை சமாளிக்க இயலாமல் இருப்பதால் அவர்கள் வீடுகளில் இருந்துவிடுகிறார்கள்.

பொருளாதார நெருக்கடியினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பெருந்தோட்டப்பகுதிகளில் ஆரம்ப பாடசாலைகளில் 4 சதவீதமும் இரண்டாம் நிலை பாடசாலைகளில் 20 சதவீதமும் கல்லூரி மட்டத்தில் 26 சதவீதமும் மாணவர்கள் கல்வியை இடைநடுவில் நிறுத்தியிருப்பதாக கொள்கை ஆய்வுகளுக்கான நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. குறைந்தளவு கல்வியறிவைக் கொண்ட ஒரு சனத்தொகையினால் எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு அளவிடமுடியாததாகும்.

சனத்தொகையின் பெருமளவானோரின் பொருளாதார நிலை படுமோசமானதாக இருக்கிறது. சனத்தொகையில் அரைவாசிக்கும் நெருக்கமானவர்கள் (42 சதவீதமானோர்) வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக பேராதனை பல்கலைக்கழக ஆய்வொன்று கூறுகிறது. 2019ஆம் ஆண்டில் இது 14 சதவீதமாகவே இருந்தது. கடந்த மூன்று வருடங்களில் வறுமை மட்டம் மூன்று மடங்காக அதிகரித்திருப்பதாக பொருளாதாரப் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள கூறியிருக்கிறார்.

2019ஆம் ஆண்டில் சுமார் 30 இலட்சம் மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்தார்கள். ஆனால், 2022 ஒக்டோபரில் அத்தகையவர்களின் எண்ணிக்கை 96 இலட்சமாக அதிகரித்திருக்கிறது. இத்தகைய பாதகமான சூழ்நிலைகளில் அரசியல் சமுதாயமொன்றில் உறுதிப்பாட்டை ஒன்றில் நியாயப்பாட்டின் ஊடாக அல்லது பலவந்தத்தின் ஊடாகவே உறுதிப்படுத்தமுடியும். பலவந்தத்தின் மூலம் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டால் அது பெரிய அனர்த்தமாகப் போகும்.

### தேர்தல் மூலம் தீர்வு

பொருளாதார அபிவிருத்தியைச் சாதிப்பதற்கு அரசியல் உறுதிப்பாடு முக்கியமானது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ச்சியாக வலியுறுத்திவருகிறார். அனுமதி பெறாமல் முன்னெடுக்கப்படும் எந்த ஆர்ப்பாட்டத்தையும் தடுத்துநிறுத்த பாதுகாப்புப் படைகள் பயன்படுத்தப்படும் என்ற அவரின் அண்மைய அறிவிப்பு பொருளாதார இடர்ப்பாட்டு நிலைவரம் தீவிரமடையும் என்று அரசாங்கம் எதிர்பார்ப்பதன் அறிகுறியாகும். கடந்த காலத்தில் ஊழலிலும் வன்முறையிலும் ஈடுபட்டவர்கள் ஆளும் கட்சியையும் அதைச் சார்ந்த கும்பலாகவும் இருப்பதன் காரணத்தால் அவர்கள் கண்டும் காணாமல் விடப்படுவது தொடர்பில் பொருளாதார இடர்ப்பாடுகளினால் கடுமையான கஷ்டங்களை அனுபவிக்கும் மக்கள் பெரும் வெறுப்படைந்திருக்கிறார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு கடனுதவியைப் பெறுவதற்கான தகுதியை இலங்கை பெறவேண்டுமானால் ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்திருக்கிறது.

தவறிழைத்தவர்களின் வாக்குகள் நாடாளுமன்றத்தில் தேவை என்ற காரணத்துக்காக அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கத்தவறுவது அரசியல் ரீதியில், நடைமுறையில் அவசியமாக இருந்தாலும் கூட தார்மீக ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். ஒரு தொடக்க நடவடிக்கையாக முக்கியமான பொருளாதார ஒப்பந்தங்கள் ஊழலின்றி முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி நம்பகமானதும் சுயாதீனமானதுமான தேசிய கொள்வனவு ஆணைக்குழுவொன்றை நியமிக்கவேண்டும்.இரண்டாவதாக, தேர்தல்களை எதிர்நோக்கும் சிக்கலான தீர்மானத்தை அவர் எடுக்கவேண்டும்.

நாட்டின் பிரச்சினைகள் ஒரு சர்வாதிகாரியினால் அன்றி அரசியல் ஞானமுடைய ஒரு தலைவரினால் கையாளப்பட்டால் அவற்றை நாடும் உலகமும் ஏற்றுக்கொள்ளும். மக்களின் உடன்பாட்டை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கம் ஜனநாயகத்தின் சாராம்சத்தை கொண்டதாக அமைகிறது. அந்த உடன்பாடு கிரமமாக நடத்தப்படுகின்ற நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் மூலமாகவே வெளிப்படுத்தப்படுகிறது. உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒரு வருடமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒத்திவைப்புக்கான சட்டரீதியான கூடுதல்பட்ச காலத்தை அவை எட்டுகின்றன. அடுத்தவருடம் மார்ச் மாதத்துக்கு முன்னதாக அந்த தேர்தல்களை நடத்தவேண்டியிருக்கிறது.

தங்கள் பிரதிநிதிகளை மக்கள் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்வதற்கும் தங்களது விருப்பங்களை வெளிப்படுத்துவதற்கும் தேர்தல்கள் வாய்ப்பைக் கொடுக்கின்றன. இது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய தீர்மானங்களைப் பொறுத்தவரை அரசாங்கத்துக்கு வழிகாட்டலை வழங்குவதுடன், பொருளாதாரச் சுமையையும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் பாரப்படுத்தக்கூடியதாக இருக்கும்.

மாகாணசபை தேர்தல்கள் 2018ஆம் ஆண்டில் இருந்து ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. ஜனநாயக அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் மாகாணசபைகள் ஆட்சிமுறையின் சுமையை பகிர்ந்துகொள்ளக் கூடியவை. அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் கீழ் இடம்பெற்ற அதிகாரப்பரவலாக்கல் நாட்டில் இன அமைதியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கும் ஜனாதிபதி உள்ளூராட்சி தேர்தல்களுடன் சேர்த்து மாகாண சபை தேர்தல்களையும் நடத்துவது குறித்து அக்கறையுடன் பரிசீலிக்கவேண்டும்.

இதன் மூலம் நிதிச்செலவையும் குறைக்க முடியும்.அவ்வாறு செய்வதன் மூலம் ஒரு சர்வாதிகாரியாக அன்றி மதிப்புமிக்க ஓர் அரசியல் தலைவராக ஜனாதிபதி நியாயப்பாட்டைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்

பெசில் தலைக்கு ஏன் டை அடிக்கேல்ல, ஏன் நரைமுடியுடன் இலங்கைக்கு வந்தார் எண்டு விவாதம் நடத்துறாங்கள்..! இதுதான் நாட்டில பெரும் பிரச்சினை பாருங்கோ..!



## இன்றைய நாளில்...

* 1872 – முதலாவது சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி கிளாஸ்கோவில் ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் இடம்பெற்றது.
* 1917 – முதலாம் உலகப் போர்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.ஐயாத்துரை என்ற லான்ஸ் கோப்ரல் போரில் ஈடுபட்டு இறந்தார்.
* 1967 – சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தான் மக்கள் கட்சியை ஆரம்பித்தார்.
* 1995 – வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.
* 2000 – நாசா தனது 101ஆவது விண்ணோடத் திட்டத்தை ஆரம்பித்தது.

# அமைச்சரவை முடிவுகள்

## 2022.11.28 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

**01. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் சுவிற்சர்லாந்தின் ஏற்றுமதி ஊக்குவிப்பு வேலைத்திட்டத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் சுவிற்சர்லாந்து அரசின் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க செயலாளர் அலுவலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இறக்குமதி ஊக்குவிப்பு வேலைத்திட்டத்துடன் இணைந்து பதனிடப்பட்ட உணவுகள், பாதுகாக்கப்பட்ட மீன் மற்றும் கடலுணவுகள், பெறுமதிசேர்க்கப்பட்ட துணிகள் போன்ற ஏற்றுமதி உற்பத்திகளுக்காக விஞ்ஞான ரீதியான கற்கையொன்றை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான ஐரோப்பிய சந்தையை அணுகுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தல் இக்கற்கையின் நோக்கமாகும். குறித்த கற்கைக்கு சுவிற்சர்லாந்து பிராங்க் 1,00,000 நிதி சுவிற்சர்லாந்தின் இறக்குமதி ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இந்திய நிதியுதவியின் கீழ் அதிக விளைவுகளைக்கொண்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

இந்திய நிதியுதவியின் கீழ் அதிக விளைவுகளைக்கொண்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் 2005ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2005-2010, 2010-2015 மற்றும் 2015-2020 வரையான காலப்பகுதிகளுக்கான இரு நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தித் துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் உப கருத்திட்டமொன்றின் செலவு 300 மில்லியன் இலங்கை ரூபாவாக மட்டுப்படுத்தப்படுவதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்படும் மொத்தக் கருத்திட்டங்களின் உயர்ந்தபட்ச பெறுமதி 5 பில்லியன் இலங்கை ரூபாவாக அமையும். ஆனாலும், நாட்டில் தற்போது நிலவுகின்ற நெருக்கடி மற்றும் பணவீக்கம் காரணமாக 300 மில்லியன் ரூபா உயர்ந்தபட்ச பெறுமதி எல்லையில் ஒருசில கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சிரமமாக அமைவதால், குறித்த எல்லையை 600 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்படும் மொத்தக் கருத்திட்டங்களின் உயர்ந்தபட்ச பெறுமதியை 10 பில்லியன் இலங்கை ரூபாவாக அதிகரிப்பதற்கும் இரு தரப்பினர்களும் உடன்பாடு தெரிவித்துள்ளனர். அதற்கமைய, இரு நாடுகளுக்கிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையில் நிதியிடலுக்காக முன்மொழியப்பட்டுள்ள இலங்கை சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் கருத்திட்டம் மற்றும் பசுமை கொள்கைகளுக்கான உரையாடல்களுக்கு வசதியளித்தல் கருத்திட்டம்**

பசுமைக் கொள்கைகளின் அடிப்படையிலான இலங்கை மற்றும் உள்ளடக்கப்பட்ட ஒற்றுமையான சமூகத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 2021 தொடக்கம் 2027 வரையான காலப்பகுதிக்காக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வருட அளவுகோல் கருத்திட்டத்தின் கீழ் நிதி அனுசரணை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த துறைகள் மற்றும் ஒத்துழைப்புப் பணிகளுக்காக 2021-2024ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக 80 மில்லியன் யூரோ நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் இலங்கையில் சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 16 மில்லியன் யூரோ நிதியை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய குறித்த நிதி வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் நிதியுதவி ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. நிலைபெறுதகு அபிவிருத்தி ஒத்துழைப்பு, பங்களிப்பு மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்கள் தொடர்பான சர்வதேச நீர் மாநாடு – 2022**

2022.12.14ஆம் திகதி தொடக்கம் 2022.12.16ஆம் திகதிவரை நிலைபெறுதகு அபிவிருத்தி ஒத்துழைப்பு, பங்களிப்பு மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்கள் தொடர்பான சர்வதேச நீர் மாநாடு – 2022 ஒழுங்குபடுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நீர் தொடர்பான தொழில்வாண்மையாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை ஒருங்கிணைத்தல், ஆய்வுகளுக்கான கருத்துகள் மற்றும் அறிவுப்பகிர்வு, நீர் தொடர்பான வாண்மையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் பல்வேறு நாடுகளில் நீர் தொடர்பான அனுபவங்கள் மற்றும் வெற்றியளிப்புகளை பகிர்ந்துகொள்ளல் போன்றவற்றை நோக்கமாகக்கொண்டு குறித்த மாநாட்டை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, குறித்த உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களை தொடர்புபடுத்தி முன்மொழியப்பட்டுள்ள மாநாட்டை நடத்துவதற்காக நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் 6,000 பேருக்கான இயலளவு விருத்தியைக் கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பெருந்தோட்டத் துறை அமைச்சு மற்றும் பிரான்ஸ் Ksapa கம்பனிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

பிரான்ஸ் அரசின் பொருளாதார, நிதி மற்றும் மீட்பு அமைச்சு, பிரான்ஸ் மிசெலின் கூட்டுறவு நிதியுதவியின் கீழ் பெருந்தோட்டத் துறை அமைச்சின் வழிகாட்டலில் பிரான்ஸ் Ksapa கம்பனியால் மொனராகல மாவட்டத்தில் படல்கும்புர மற்றும் மெதகம போன்ற இறப்பர் செய்கைப் பிரதேசங்களிலுள்ள 6,000 சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக இறப்பர் உற்பத்தியில் பெறுமதிச் சேர்க்கை அதிகரித்தல் மற்றும் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் இயலளவை அதிகரிக்கும் கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டம், தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தின் மொத்தச் செலவு 7,26,700 யூரோ எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் இலத்திரனியல் சாட்சிகளை வெளிப்படுத்தல் தொடர்பான இணையக் குற்றங்கள் பற்றிய சமவாயத்திற்கான இரண்டாவது மேலதிக நெறிமுறை வரைபில் கையொப்பமிடல்**

(Budapest Convention on Cybercrime)

புடாபெஸ்ட் இணைய குற்றங்கள் தொடர்பான சமவாயம் என அழைக்கப்படும் மேம்படுத்தப்பட்ட ஒத்தழைப்பு மற்றும் இலத்திரனியல் சாட்சிகளை வெளிப்படுத்தல் தொடர்பான இணையக் குற்றங்கள் பற்றிய சமவாயத்தின் பங்காள நாடாக இலங்கை கையொப்பமிட்டுள்ளதுடன், குறித்த சமவாயம் 2015.09.01ஆம் திகதி தொடக்கம் நடைமுறையிலுள்ளது.

அதன் இரண்டாவது மேலதிக நெறிமுறை வரைவில் கையொப்பமிடும் நிகழ்வு 2022.11.30ஆம் திகதி ஸ்ரார்ஸ்பேர்க் நகரில் இடம்பெறவுள்ளதுடன், குறித்த நெறிமுறை வரைவில் கையொப்பமிடுவதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நலன்புரி கொடுப்பனவு செலுத்தல்களுக்கான ஒழுங்குவிதிகளை விதித்தல்**

2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நலன்புரி கொடுப்பனவு (கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையவர்களாகவுள்ள ஆட்களைத் தெரிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளின் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1931ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தை (Buddhist Temporalities Ordinance) திருத்தம் செய்தல் மற்றும் தேரவாத பிக்குமார் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம்**

1931ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தை திருத்தம் செய்வதற்காக இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பினும், பல்வேறு தரப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மற்றும் யோசனைகள் தொடர்பாக உடன்பாடுகளை எட்டுவதற்கு இயலாமை போனமையால் குறித்த திருத்தங்களை மேற்கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது. தற்போது குறித்த தரப்பினர்களுக்கிடையே முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஏதேனும் பௌத்த பிரிவுகள் அல்லது பிக்குமார் பேரவையால் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்திற்கமைய ஏதேனுமொரு தேரர் செயற்படாத சந்தர்ப்பத்தில் குறித்த பிக்குமார் பேரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய ஏற்பாடுகள் உள்ளடங்கிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக பல்வேறு தரப்பினர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்துகள் மற்றும் யோசனைகளைக் கருத்திற்கொண்டு, தேரவாத பிக்குமார் கதிகாவத் (பதிவு செய்தல்) அடிப்படைச் சட்டமூலத்தை மேலும் திருத்தம் செய்து, குறித்த சட்டமூலத்தைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 1931ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக மற்றும் தேரவாத பிக்குமார் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலத்திற்காக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 1940ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 47(1)ஆம் உறுப்புரையின் கீழ் ஒழுங்குவிதிகளை விதித்தல்**

தொல்லியல் பெறுமதிகொண்ட இடத்திற்கோ அல்லது சொத்துக்கோ சட்ட விரோதமாக பாதிப்புகளை ஏற்படுத்தி தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தை மீறுகின்ற ஆளொருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொல்லியல் திணைக்களத்திற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் இயலுமை உண்டு. அதற்கமைய, குறித்த அரச நிறுவனத்தால் இலங்கையில் தொல்லியல் இடங்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாத்துப் பேணுவதற்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.

அதற்காக குறித்த நிறுவனங்களிலுள்ள பணியாளர் சூழாமை மேலும் ஊக்குவிக்கும் நோக்கில் 1940ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொருத்தமான ஒழுங்குவிதிகளை விதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. உள்ளூர் நிர்வாகக் கம்பனிகளால் மூலப்பொருள் இறக்குமதியின்போது செலுத்த வேண்டிய கொடுப்பனவு மூலதனத்திற்காக வெளிநாடுகளில் குறுகியகால வெளிநாட்டுச் செலாவணி நிதிக்கடன் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை வெளியிடல்**

உள்ளூர் நிர்வாகக் கம்பனிகள் உள்ளூர் சந்தைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும்போது, இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்டுள்ள அதன் தாய்க் கம்பனி அல்லது ஒரே கம்பனியின் கூட்டுக் கம்பனியால் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 7(1) உறுப்புரையின் கீழ் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல்**

வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் அடிப்படையில் ஏற்படக்கூடிய எதிர்மய விளைவுகளைக் கருத்திற்கொண்டு ஒருசில மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடையதாக வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டிலிருந்த வெளியே அனுப்புதலை நிறுத்துதல் மட்டுப்பாடுகளை விதிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அடிக்கடி ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலம் 2022.12.29ஆம் திகதி முடிவடைகின்றது. அதனால், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் 22ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலத்தை 2022.12.30ஆம் திகதிவரை 06 மாதகாலத்திற்கு நீடிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. உலக காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆய்வுகளுக்கான ஆசிய பசுபிக் வலையமைப்பு (Asia – Pacific Network for Global Climate Change Research) தெற்காசிய பிராந்திய குழுக் கூட்டம் மற்றும் கருத்திட்ட முன்மொழிவு அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல்**

உலக காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆய்வுகளுக்கான வலையமைப்பு என்பது உலக காலநிலை மாற்றங்கள் மற்றும் நிலைபெறுதகு இலக்குகளுக்கான சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு இயலுமாகும் வகையில் ஆசிய பசுபிக் வலயத்தில் செயற்படுகின்ற 22 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்ற அரசுகளுக்கிடைய வலையமைப்பாகும். குறித்த வலையமைப்பின் முக்கிய நோக்கமாக அமைவது, ஆசிய பசுபிக் வலயத்தில் உலக நிலைபெறுதகு இலக்குகளுக்காக மேற்கொள்ள வேண்டிய பிராந்திய ரீதியான இயலளவு விருத்தியை ஏற்படுத்துவதாகும்.

உலக காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகளுக்கான ஆசிய பசுபிக் வலையமைப்பு உப வலயக் குழுக் கூட்டம் மற்றும் தெற்காசிய கருத்திட்ட முன்மொழிவு அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சியை 2022.11.29 தொடக்கம் 2022.12.01 வரை கொழும்பில் நடத்துவதற்காக இலங்கை அரசால் உபசரிப்புகளை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

## 29.11.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 128 0456 | 14 1825 |
| கனேடியன் டொலர் | 155 406 | 167 1640 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38,1257 | 41 1357 |
| யூரோ | 260 5548 | 275 87 1 |
| ஜப்பான் யென் | 1 473 | 1 5806 |
| சிங்கப்பூர் டொலர் | 15 3045 | 160 44 4 |
| ஸ்ரேலிங் பவுன் | 32 3175 | 336 2748 |
| சுவிஸ் பிராங் | 265 8620 | 284 1511 |
| ஐ.அ.டொலர் | 250 1268 | 260 606 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1871 |
| குவைட் | குவைட் தினார் | 0,07 3 55 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1841 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,3011 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 54 2 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 7666 |

## பெயர் மாற்றம்

குருநாகல் மாஸ்பொத, நவகத்த, அருணலுகம என்னும் முகவரியில் வசிக்கும் (அடையாள அட்டை இல: 366782222V) என்ற இலக்கத்தைக் கொண்ட நான் எனது சுய விருப்பின்பேரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை அப்துல்லாஹ் என்று மாற்றிக் கொண்டேன் எனவும் இனி சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பமிடுவேன் எனவும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஏ.அப்துல்லாஹ்



# இலங்கை போக்குவரத்து சபை சாரதிகள் பணிப்புறக்கணிப்பில்







**(மன்னார் நகர் நிருபர்)**

மன்னார் அரச பஸ் சாரதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை (29) பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் அரச போக்குவரத்து பஸ் சாரதி ஒருவரை தனியார் பஸ் சாரதி கூரிய ஆயுதங்களால் தாக்கிய நிலையில் குறித்த சாரதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இருப்பினும், பொலிஸார் உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனக் கூறியும் தாக்குதலை மேற்கொண்ட சாரதிக்கு உடனடியாக பிணை வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலும் நேற்று வடமாகாணம் முழுவதுமாக அரச போக்குவரத்து சாரதிகள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

குறித்த சம்பவத்திற்கு காரணமானவரை சட்டத்தின் மூலம் உரிய விதமாக தண்டிக்கக் கோரியும் அரச போக்குவரத்து சாரதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் இல்லாவிட்டால் தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் அரச போக்குவரத்து சாரதிகள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

**(வவுனியா நிருபர்)**

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று (29) காலை தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன், தாக்கிய நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.


இந்நிலையில், தாக்கிய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இந்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுப்பதாக இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக வடமாகாணத்தின் இலங்கை போக்குவரத்து சபையின் பல சாலைகள் இப்பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையுடன் வவுனியா சாலையினரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை காரணமாக பொதுமக்கள், அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளமையுடன் பஸ்களின்றி பஸ் தரிப்பிடங்களில் பல மணிநேரம் காத்திருக்கின்ற நிலைமையும் காணப்பட்டது.









# சங்கிலிய மன்னனின் குடும்பப் படம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் திறந்துவைப்பு








**(யாழ். நிருபர்)**

யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலிய மன்னனின் குடும்பப் படம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையில் நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

சங்கிலியனின் குடும்பப் படத்தை கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

சங்கிலிய மன்னனின் குடும்பப்படத்தை சித்திரத்துறை மாணவ ஆசிரியர்களின் மூலம் கல்லூரியின் சித்திரத்துறை விரிவுரையாளர் திருமதி சுதர்சினி விக்கினமோகன் நெறிப்படுத்தியிருந்ததுடன், கந்தையா முத்தம்மா நினைவாக திருமதி மிருணாளினி இதற்கான அனுசரணையையும் வழங்கினார்.

இதேவேளை, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இதற்கு முன்னர் வீர சங்கிலியன் மன்னன் விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டது.

அதேவேளை, கல்லூரியின் நுழைவாயிலில் தனிக்கருங்கல்லாலான 13.5 அடி சங்கிலியன் உருவச்சிலையும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கல்லூரி தமிழ் மன்றத்தால் ஆண்டுதோறும் "வீரசங்கிலி" ஆண்டுமலர் வெளியிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் சங்கிலிய மன்னனை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியும் தனது அடையாளமாக பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா நகரசபைக்கு புதிய செயலாளர் நியமனம்

**(வவுனியா நிருபர்)**



வவுனியா நகர சபையின் புதிய செயலாளராக திருமதி விமலவேணி நிசங்க நேற்று (29) காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். கிளிநொச்சி சென். தெரேசா மகளிர் மகாவித்தியாலய பழைய மாணவியும் பேராதெனிய பல்கலைக்கழக கலைமாணி பட்டதாரியுமான இவர், கிளிநொச்சி பொது வைத்தியசாலை, வவுனியா வடக்கு வலயக்கல்வி, பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகிய இடங்களில் நிர்வாக உத்தியோகத்தராகவும் கடமையாற்றியுள்ளார்.

வவுனியா நகரசபையில் வெற்றிடமாக காணப்பட்ட செயலாளர் பதவி நிலைக்கு திருமதி விமலவேணி நிசங்க நியமிக்கப்பட்டு தனது கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளார்.

# சேர். பொன். இராமநாதனின் 92ஆவது குருபூஜை தினம்





**(யாழ். நிருபர்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாவதற்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும், சைவப் பெரு வள்ளலாருமான சேர். பொன். இராமநாதனின் 92ஆவது குருபூசை நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர். பொன்.







இராமநாதனின் உருவச்சிலைக்கும், சபா மண்டபத்தினுள் உள்ள உருவப்படத்துக்கும் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மலர்மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தினார்.

# சமூக சமையலறை செயற்றிட்டம் மலையகத்தில் அங்குரார்ப்பணம்

**(எஸ்.கணேசன்)**

கனேடிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சிலோன் யூத் மூவ்மெண்ட் மற்றும் பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டம் ஆகியன இணைந்து மலையகத்தில் முதன்முறையாக 'சமூக சமையலறை' என்ற செயற்றிட்டம் நேற்று (29) கலாபொக்கவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேனியல் பூட் மற்றும் பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் நாயகமும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமாகிய பாரத் அருள்சாமி ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்த சமூக சமையலறை செயற்றிட்டம் மூலம் 100 சிறுவர்களுக்கு தினமும் போஷாக்கான உணவு வழங்குவதற்கும் அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி, திறன் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் இ.தொ.கா. உப தலைவர் பாரத் அருள்சாமி உரையாற்றுகையில்,

நாடு எதிர்நோக்கியுள்ள அசாதாரண பொருளாதார நிலை காரணமாக உணவுப் பணவீக்கம் 86 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை உணவுக்கான கேள்வியும் அதிகரித்துள்ள நாடுகளில் இலங்கை ஆறாவது இடத்தில் உள்ளது. மேலும் அத்தியாவசிய தேவைக்கான 152 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மலையகத்தில் விசேடமாக பெருந்தோட்டப் பகுதிகளில் சிறுவர்களுக்கான புரதப் பற்றாக்குறை, கர்ப்பிணி தாய்மாருக்கு தேவையான போஷாக்கான உணவு வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்நிலையில் கனேடிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சிலோன் யூத் மூவ்மென்ட்டின் வழிகாட்டலில் மத்திய மாகாணத்தில் முதல் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பிரஜாசக்தி நிலையங்களின் ஊடாக இந்த சமூக சமையலறை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக கண்டி கலாபொக்க, மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக், மாத்தளை











எல்கடுவ பிரஜாசக்தி நிலையங்களில் இதனை ஆரம்பித்துள்ளோம். அனைத்து பகுதிகளுக்கும் இதனைக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும். தேவையறிந்து எமது வேண்டுகோளுக்கிணங்க இத்திட்டத்தை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டிய கனேடிய தூதரகத்திற்கும், நேரடியாக விஜயம் செய்த உயர்ஸ்தானிகருக்கும், எனது மனமார்ந்த நன்றிகள். மேலும், இங்குள்ள இளைஞர், யுவதிகளின் திறன்சார் அபிவிருத்திக்கும் பெண்களின் தொழில் முனைவுக்கும் கனேடிய அரசாங்கம் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த கனேடிய உயர்ஸ்தானிகர் டேனியல் பூட், கனேடிய அரசாங்கம் இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார சிக்கலில் இருந்து மீள தங்களது அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாகவும், இந்த சமூக சமையலறை வேலைத்திட்டம் தங்களது நாட்டின் உணவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு அமைவாக இலங்கைக்கு கை கொடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். அரசாங்க அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் கண்டி பன்வில மருத்துவ அதிகாரியினால் பரிந்துரைக்கப்பட்ட 40 கர்ப்பிணித் தாய்மாருக்குத் தேவையான போஷாக்கான பானம், மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊவா மாகாண ஆளுநர் கண்காணிப்பு விஜயம்





**(பதுளை நிருபர்)**

பல்லேவெல மகா வித்தியாலயத்துக்கு (தேசிய பாடசாலை) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் (28) மேற்கொண்டார்.

பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும் பாடசாலை செயலிழந்து போவதைத் தடுப்பதற்காகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள் விடுத்த வேண்டுகோளுக் கிணங்கவே அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டார்.

சுமார் 60 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட குறித்த பாடசாலையில் 6ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் ஆண்டு வரை கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், 582 மாணவர்களுக்கு 27 ஆசிரியர்கள் மாத்திரமே பணிபுரிவதாகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் தற்போது ஆசிரியர்களின் பற்றாக்குறை மிகவும் பாரதூரமான நிலைமையாக மாறியுள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் நோக்கில் ஊவா மாகாண ஆளுநர் குறித்த பாடசாலைக்குக் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு காணப்படும் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பில் அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்களுடன் விரிவாகக் கலந்துரையாடினார். பின்னர், அதனை நிவர்த்தி செய்வதற்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கிய அதேவேளை, உடனடியாக அதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் உத்தரவிட்டார். மேலும், குறித்த பாடசாலையின் ஆசிரியர் விடுதியையும் கூடிய விரைவில் பாவனைக்கு உகந்த முறையில் சீர்செய்து மீட்டெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

இந்த விஜயத்தின்போது பிரதேச சபைத் தலைவர் சமன் வர்ணகுலசூரிய, மாகாண கல்விப் பணிப்பாளர் டி.எம்.ரத்நாயக்க, மாகாண திட்டமிடல் பணிப்பாளர் டி.எம். சமரசேகர, பிராந்திய கல்விப் பணிப்பாளர், அதிபர், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# மரண பரிசோதகர், திருமணப் பதிவாளரின்றி அக்கரபத்தனையில் மக்கள் அசௌகரியம்

## நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரதேச சபைத் தலைவர் கோபால் வேண்டுகோள்



**(தலவாக்கலை நிருபர்)**


"அக்கரபத்தனை பிரதேசத்தில் 103 தோட்டங்கள் உள்ளன. இங்கு மூன்று அரச வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. ஆனால், மரண பரிசோதகரோ திருமணப் பதிவாளரோ இல்லை. இதனால் இப்பிரதேச மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்" என்று அக்கரபத்தனை பிரதேச சபைத் தலைவர் ராமன் கோபால் தெரிவித்தார்.


நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுசெயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


இப்பிரதேசத்திலுள்ள சமுர்த்தி உப காரியாலயமொன்று திறக்கப்பட்ட நாள் முதல் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது. மேலும் போடைஸ் - டயகம வீதி உடைந்து குண்டும் குழியுமாக காணப்படுவதால் அதில் பயணிக்கும் வாகன சாரதிகள் தினந்தோறும் அச்சத்துடனேயே பயணிக்கின்றனர். பிரதேச மக்களின் நலன் கருதி இதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் லிந்துலையிலிருந்து டயகம வரையிலான வீதியும் மோசமாகவே காணப்படுகின்றது. அதனையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மண்சரிவு காரணமாக மெராயா எல்ஜின் வீதி தாழிறங்கியுள்ளது. இதனால் மூன்று தோட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் மன்றாசி - திஸ்பனை விளையாட்டு மைதானத்தில் குவிக்கப்பட்டுள்ள கற்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் சக்திவேல் மற்றும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கஹகொல்ல பெருந்தோட்டத்தில் இலவச மூக்குக் கண்ணாடிகள் விநியோகம்







கண்டி அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் இலங்கைக் கிளையினால் வசதி குறைந்த குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் நேற்று (29) கஹகொல்ல பெருந்தோட்ட திருமறை கலாமன்ற பணிமனை மண்டபத்தில் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அறக்கட்டளையின் தலைவர் தேசமான்ய என்.கருணாகரன் உட்பட மூவின மக்களும் கலந்துகொண்டனர். மூக்குக் கண்ணாடிகள் கையளிக்கப்படுவதையும் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (கண்டி நிருபர்)

# மோட்டார் சைக்கிள் திருட்டு மூவர் கைது

**(பசறை நிருபர்)**

மோட்டார் சைக்கிள் திருட்டை மேற்கொண்டு வந்த ஒருவரையும் திருட்டு மோட்டார் சைக்கிள்களை பகுதிகளாகக் கழற்றிய இருவரையும் மெதகம பொலிஸார் கைது செய்துள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

பிபில கனுல்வெல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் போலி சாவிகளைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிள்களைத் திருடி மொனராகலை அதிமலே பகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் ஒன்றில் வைத்து திருடிய மோட்டார் சைக்கிள் பகுதிகளை வேறு மோட்டார் சைக்கிள்களில் இணைத்து பணம் சம்பாதித்துள்ளார். நீண்ட காலமாக இச்செயலில் இவர் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதனையடுத்து பொதுமக்கள் அளித்த புகாரின்பேரில், கனுல்வெல பிரதேச மோட்டார் சைக்கிள் திருட்டில் சம்பந்தப்பட்ட நபரையும் அதிமலை பகுதியில் திருட்டு மோட்டார் சைக்கிள்களை பகுதிகளாக கழற்றிய இருவரையும் மெதகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிபில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்கள் எதிர்வரும் 1ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நாட்டின் ஒழுக்கத்துக்கு ஏற்றவாறு பொருளாதார அபிவிருத்தி தேவை

## சர்வமத பிரதிநிதிகள் தேசிய பேரவை உபகுழுவில் சுட்டிக்காட்டு







நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் அதேவேளை நாட்டில் பின்பற்றப்படும் ஒழுக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவை மேற்கொள்ளப்பட வேண்டும் என சர்வமதத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவின் முன்மொழிவுகள் குறித்து விளக்கமளித்தபோதே சர்வமத தலைவர்கள் இந்தக் கருத்தை முன்வைத்தனர்.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரவணக்க தலைமையில் அண்மையில் (26) நாடாளுமன்றத்தில் கூடியபோதே இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்கு, கடன் மறுசீரமைப்பு, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், போக்குவரத்து திறன், எரிசக்தி போன்ற துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக துறைசார்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களுடன் நடத்திய கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய முதல் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க விளக்கமளித்தார்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய கால தீர்வுகள் அடங்கிய இரண்டாவது அறிக்கையை முன்வைக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அந்த அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்ற தேசிய பேரவை தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், உலக வங்கியின் கணக்கெடுப்புக்கு அமைய இந்நாட்டில் உயர்ந்த வருமானம் பெறும் 20 வீதமானவர்களில் 12 வீதமானவர்கள் சமுர்த்தி உள்ளிட்ட அரசாங்கத்தின் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதாகவும், நாட்டில் குறைந்த வருமானம் பெறும் 49 வீதமானவர்களில் 20 வீதமானவர்களுக்கு மாத்திரமே நிவாரணங்கள் கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் குழு கவனம் செலுத்தியிருப்பதாகவும், தற்பொழுது காணப்படும் 2200 அரசாங்க நிறுவனங்களுக்கான கொள்கைகளைத் தயாரிப்பது உள்ளிட்ட முன்மொழிவுகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

அது மட்டுமின்றி, நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கு வரவு-செலவுத்திட்டத்தில் பாரியளவிலான பணம் ஒதுக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், இவ்விடயம் தொடர்பில் உரிய முறையில் ஆராய்ந்து வழிகாட்டல் ஒன்று முன்வைக்கப்படும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அனைத்து மதத் தலைவர்களும் தமது கருத்துக்களைத் தெரிவித்ததுடன், பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான முன்மொழிவுகள் குறித்து தேசிய பேரவையின் தலைவருக்கு நன்றி தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கலாநிதி ஓமல்பே சோபித தேரர், கலாநிதி அகுரட்டியே நந்த தேரர், கலாநிதி அகலகட சிறிசுமன தேரர், வத்தேவாவே தம்மானந்த தேரர், புதுகல ஜீனவன்ச தேரர், கல்கந்தே தம்மானந்த தேரர், அக்குரஸ்ஸ ஜவன தேரர், பசுசரமுல்லே தயாவன்ச தேரர், ஜிகுமாதுவே விமலபுத்தி தேரர், பிரம்மஸ்ரீ கோபிதாஸ் தேரர், எம்.எஸ்.எம் தாசிம் மௌலவி, கலாநிதி சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள், அல்ஷேய்க் அர்கம் நூராமித் மௌலவி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

இரண்டு கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அதிரடிப்படையின் அநுராதபுரம் உளுக்குளம் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய புளங்குளம் - உளுக்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளதுடன், இரண்டு கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 37 மற்றும் 52 வயதுடைய அநுராதபுரம் விஜயபுர மற்றும் அநுராதபுரம் -உளுக்குளம் பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்கள் இருவரையும், கைப்பற்றிய கேரள கஞ்சாவையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அநுராதபுரம் - எலயாபத்துவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.பல்கலை மாணவர் ஒன்றிய முக்கியஸ்தர்கள் வழக்கில் விடுதலை



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை சட்டமா அதிபர் கைவாங்கியதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று செவ்வாய்க்கிழமை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 2019 மே மாதம் 04ஆம் திகதி இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மாவீரர்களின் ஒளிப்படங்கள் மற்றும் தமிழீழ வரைபடம் என்பன கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ்.கபில்ராஜ் ஆகிய இருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதனையடுத்து அவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு தவணைகளின் விசாரணைகளின் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

அந்நிலையில் குறித்த வழக்கை சட்டமா அதிபர் கைவாங்கியதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.







கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் மற்றும் தமிழ் வர்த்தக சங்கம் ஆகியவை இணைந்து நடத்திய தென்கிழக்குப் பல்லைக்கழக தமிழ் மொழித்துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.எஸ்.எப்.ஸாதியா பௌஸர் எழுதிய 'மலையகக் கவிதைகளில் மக்களும்' மற்றும் 'மலையகக் கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும்' எனும் இரு நூல்களின் வெளியீடும், அவர் அண்மையில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட கண்டி மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் கே.ஆர்.சித்தீக் மற்றும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் ஆகியோர் பேராசிரியர் ஸாதியா பௌஸரிடமிருந்து நூல் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதையும் நூலாசிரியருக்கு தமிழ், முஸ்லிம் வர்த்தக சங்கத் தலைவர்களான அன்பழகன், சலீம்டீன் ஆகியோர் விருது வழங்கிவைப்பதையும் அருகில் தென்கிழக்கு உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான், பேராசிரியர் துரை மனோகரன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(இக்பால் அலி)

# களுத்துறை தமிழர்களின் பெருமை; இங்கிரியவில் 9 'ஏ' பெற்ற மாணவி!



(மணி ஸ்ரீகாந்தன்)

இங்கிரிய, றைகம், கீழ்ப்பிரிவு விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் ர.கௌரி லலிதா ரூபினி என்ற மாணவி 2022 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் 9 'ஏ' சித்திகளைப் பெற்று களுத்துறை மாவட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு மத்தியில் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்.

இவர், இங்கிரிய தோட்டத்தில் வசிக்கும் ரஞ்சித்குமார் - அழகம்மா தம்பதிகளின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மற்றொரு மாணவியான பா.பிரகாஷினி 8 'ஏ' 'இ' 1 'சி' சித்திகளைப் பெற்றுள்ளார். இந்த மாணவி இங்கிரிய, சாந்த பீட்டர்ஸ் பகுதியில் வசிக்கும் பாலசுப்ரமணியம் தம்பதிகளின் புதல்வியாவார்.

இந்த இரண்டு மாணவிகளின் பெறுபேறுகளால் விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம் பெருமையடைவதாகவும், இந்த மாணவிகள் இருவரும் பிரத்தியேக தனியார் வகுப்புகளுக்குச் செல்லாமல் பாடசாலை கல்வியை மட்டுமே நம்பி சிறப்பாக கற்று இந்த மகத்தான வெற்றியை சாத்தியமாக்கியுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார். அவர் 'தமிழன்' நாளிதழுக்கு கருத்து தெரிவிக்கையில்,

றைகம், கீழ்ப்பிரிவு விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலய வரலாற்றில் முதன்முறையாக இந்த வரலாற்றுச் சாதனை பதிவு செய்யப்பட்டிருப்பதோடு, களுத்துறை மாவட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளின் வரலாற்றில் முதன்முறையாக 9 'ஏ' பெறுபேறுகளை மாணவி ர. கௌரி லலிதா ரூபினி பெற்றிருப்பது களுத்துறை தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும். பா.பிரகாஷினியின் சாதனையும் பாராட்டுக்குரியது.

இந்த மாணவிகளின் வெற்றிக்கு உழைத்த எமது பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களுக்கும், முக்கியமாக இந்த மாணவிகளுக்கு பக்கபலமாக இருந்த அவர்களின் பெற்றோர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதோடு, இந்த சாதனை மாணவிகளை முன்மாதிரியாக கொண்டு மற்ற மாணவர்களும் இனிவரும் காலங்களில் மகத்தான வெற்றிகளைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்ப்பார்கள் என்று நம்புகிறேன் என்று தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் மானிப்பாய் ஊடான காரைநகர் வீதியைப் புனரமைக்குமாறு கோரி சங்கானையில் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. பல வருடங்களாக குறித்த வீதி புனரமைக்கப்படவில்லை எனவும் மழைக் காலங்களில் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகவும் அதனால் வீதியைப் புனரமைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





## Finance Manager

@v dkkqplot sdc l dch f dmbx lmRqhK m -

dx Qdr onmr ha lhkhshdr

- L nmlsnq& oqlo qd l nmsglkx elm mbh krs sdl dmsr. qlonqsr, b rgeknv & l m f d et mcr mc dwodmr dr
- @bshudkx o qshbho sd lm sgd oqplo q shnmne mmt k at cf dsr, m kxyd u qh mbdr mc s d nmv qc bshnm
- Qduhdv. lh okdl dms elm mbh konkhbhdr. oqnbdct qdr lm bbnqc mbd v hsg sgd RK@r s mc qcr

B mchc sd qnehkd

- @f q ct sd lm bbnt mshmf mc elm mbd &. nqad l dl adqnelB@RK, BHL @(T ), nq@BB@(T )
- nrrdrrdr 2 - 4 xd q onrspt klexlmf dwodqhdmbd
- Rsqnmf ssdmshmmsn cds lk& mhmudrshf shud m st qd
- Dwbdlkdms Bnl l t mhb shnm, oqlr dms shnmr lkkr
- Glf g mt l dq bx. r nt mc sdbgmhb k& lS r lkkr

@m ssq bshud qdl t mdq shnm o b f d v lsr sgd lcd kb mchc sd-
lhsdqdr sdc b mchc sdr b m ookx ax r dmchmf sgdhq BUr sn qdbqthsl dmsabnmmdbsdc f l lkbnl
Bnms bst r nm+83 665 260 023 +83 666217 012-
ABnmmdbsdc ( us) Ksc-
Mn9/6, R dknm qcdmr,
Bnknl an /4

## Showroom Manager / Executive – Digital Marketing

Bnl o mx9Qlbg V ndc lhsdqm shnm k
L lmlh t l Pt klelb shnm9 BD@ K
@f d Kh ls9Adknv 24
@ookx9L m f dq- GQ & @cl lmhrsq shnm
Qlbg V ndc lhsdqm shnm k
064-2. 2 D rsdqm Snv dq, 1mc Bqnrr Rsqdds,
Bnknl an oo-

## Cook (Male/Female) Domestic Workers (Female)

lhrshst shnm9Qnx kDl a rrx neR t ch@q ah, Bnknl an dx Qdpt hqdl dms9V dkk Dwodqhdmbdc, @alkhsx sn rod lm Dmf khr g
@ookx9 bb-rhqdl a-l ne -f nu-r
Qnx kDl a rrx neR t ch@q ah,
Mn932, Gnqs m k bd,
Bnknl an /6-

## Assistant Manager – Credit

Bnl o mx9Rs sd L nqsf f d & lhudrs l dms A m
Pt klelb shnm9Cdf qdd
Dwodqhdmbd9/2 xd qr nedwdbt shud dwodqhdmbd
@f d Kh ls9Adknv 3/ d qr
@ookx9v v v -rl ha-k

## Office Assistant (Female)

Bnl o mx9Q cn L monv dq Rdqulbd ( us) Ksc-
@f d Kh ls91/-21
@ookx9q cnl monv dq155 f l lkbnl

# இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குக!

## வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்







இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 23 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்ஷங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளமை வருமாறு:

தமிழக மீனவர்கள் 23 பேரை இலங்கைக் கடற்படை கைதுசெய்துள்ளதுடன், அவர்களது 5 மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் மட்டும் 221 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது, மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் தமிழக மீனவ சமூகத்தினரிடையே கடுமையான மன அழுத்தத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் 105 மீன்பிடிப் படகுகள் தற்போது இலங்கை வசமுள்ளன. கைதுசெய்யப்பட்ட மீனவர்களின் தொடர் முயற்சி காரணமாக விடுவிக்கப்பட்டாலும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் இன்னும் இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

எனவே, மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுத்திடவும், தற்போது இலங்கைக் காவலிலுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் தேவையான தூதரக முயற்சி களை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# புலம்பெயர்வோரை தடுக்க பிரிட்டன் முடிவு

## இனி படிக்கச் செல்வதும் கடினம்



உலக செய்திகள்

பிரித்தானியாவில் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் வெளிநாட்டு மாணவர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவில் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டு 1.73 இலட்சமாக இருந்த புலம் பெயர்ந்தோரின் எண்ணிக்கையானது இந்த ஆண்டு 5.04 இலட்சமாக உயர்ந்துள்ளது.

குறிப்பாக, சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கை உயர்வே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கு பிரித்தானிய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக வெளிநாட்டு மாணவர்கன் எண்ணிக்கையை குறைப்பது உட்பட அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்வதற்கு பிரதமர் ரிஷி சுனக் திட்டமிட்டுள்ளதாக பிரதமரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

குறைந்த தரம் பட்டம் பெறும் மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் அவர்களை சார்ந்திருப்பவர்களை அழைத்து வருவதை கட்டுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மாணவர்கள் எண்ணிக்கையை குறைக்கும் திட்டங்களில், உயர்நிலை பல்கலைக்கழகங்களில் சர்வதேச மாணவர்கள் சேர்க்கையை கட்டுப்படுத்துவதும், மாணவர்களை சார்ந்தவர்களுக்கான விசாக்களை கட்டுப்படுத்துவதும் அடங்கும். இதேவேளை, அதிக கட்டணம் செலுத்தும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால், பல்கலைக்கழகங்களில் நிதியுதவி வெகுவாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் கல்வியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# வாய்ப்பாடு சொல்லாத மாணவனின் கையில் துளையிட்ட ஆசிரியர்



உத்தரப்பிரதேசத்தில் வாய்ப்பாடு சொல்லாத 9 வயது மாணவனின் கையில் 'டிரில் மெஷின்' துளையிடும் கருவியால் துளையிட்ட ஆசிரியரின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேசத்தின் கான்பூரிலுள்ள தனியார் பாடசாலையொன்றின் கணித பாட ஆசிரியர், ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடம் இரண்டாவது வாய்ப்பாடு சொல்லும்படி தெரிவித்துள்ளார்.

அதில் மாணவனொருவனுக்கு வாய்ப்பாடு சரியாக சொல்லத் தெரியவில்லை. ஆத்திரமடைந்த ஆசிரியர், பாடசாலையிலிருந்த 'டிரில் மெஷினை' எடுத்து, மாணவனின் கையை நீட்டும்படி கூறி துளையிட்டுள்ளார்.

அருகில் நின்ற மற்றொரு மாணவன், உடனடியாக டிரில் மெஷின் வயரை பிடுங்கியதால், சிறிய காயத்துடன் மாணவன் தப்பியுள்ளான்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமெ.வில் தஞ்சமடைய காத்திருந்த அகதிகள் 16,000 பேர் கைது



அமெரிக்காவில் தஞ்சமடைய காத்திருந்த அகதிகளால் மெக்சிக்கோ எல்லையில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை பொலிஸார் அப்புறப்படுத்தியுள்ளதுடன், இதுவரை சுமார் 16 ஆயிரம் பேரை கைதுசெய்துள்ளனர்.

வெனிசூலாவிலிருந்து மெக்சிக்கோ வழியாக அமெரிக்கா செல்லவிருந்த 600 அகதிகள், அமெரிக்க எல்லை அருகே அமைந்துள்ள ஜுவாரெஸ் நகரில் முகாமிட்டிருந்தனர். அவர்களை மெக்சிக்கோ பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த 4 நாட்களில், வெனிசூலா மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளிலிருந்து அகதிகளாக அமெரிக்கா செல்லவிருந்த 16 ஆயிரம் பேர் மெக்சிக்கோ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதான பெண் ஒருவர் பிணையில் விடுதலை

## 11 பேருக்கு 13ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணி வந்தமை தொடர்பாக சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெண்ணொருவரை பிணையில் விடுவித்ததுடன், ஏனைய 11 பேரையும் எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் நேற்று (29) உத்தரவிட்டார்.

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடைய இவர்கள் அம்பாந் தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்குப் பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 66 பேரை கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்குதல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதில் வழக்கிலிருந்து 3 பேரை விடுவித்ததுடன், 63 பேரில் 51 பேர் பிணையில் வெளிவந்துள்ளதுடன் தொடர்ந்து 11 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சிறைச்சாலையில் இருந்து பெண் ஒருவரை மட்டும் அழைத்துவந்த நிலையில், அவரை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பிணையில் விடுவித்ததுடன், ஏனைய 11 பேரையும் எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மொரவெவ பிரதேச சபையின் 2023இற்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றம்

(அப்துல்சலாம் யாசீம்)



மொரவெவ பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை, மொரவெவ பிரதேச சபையின் 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று (29) பிரதேச சபையின் தவிசாளர் ஜகத் வேரகொடவினால் சமர்பிக்கப்பட்டது.

மொரவெவ பிரதேச சபை பொதுஜன பெரமுன வசமிருந்தபோதிலும் பிரதேச மக்கள் மாற்றம் ஏதும் இடம்பெறலாமென அதிகமாக எதிர்பார்த்திருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் தங்கராஜா ராசமணி தனது ஆதரவை மொட்டுக் கட்சிக்கு வழங்கினார்.

இந்நிலையில், தவிசாளரினால் சமர்ப்பிக்கப் பட்ட வரவு-செலவுத் திட்டத்தை முன்னாள் பிரதேச சபை தவிசாளர் பொல்ஹேன்கொட உபரத்ன ஹிமி ஆமோதித்த நிலையில், அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

அத்துடன், கடந்த வரவு-செலவுத் திட்டத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களித்திருந்தபோதிலும் இம்முறை மொட்டுக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக பிரதேச சபையின் தவிசாளர் ஜகத் வேரகொட இதன்போது தெரிவித்தார்.

சபை உறுப்பினர்களில் ஐ.தே.க. உறுப்பினர்கள் நால்வரும் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் எழுவரும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நால்வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவருமாக மொத்தம் 16 உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் கலந்துகொண்டு ஏகமனதாக வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மறைத்து வைத்திருந்த சொட்கன் துப்பாக்கியுடன் ஒருவரை நேற்று முன்தினம் (28) மாலை கைதுசெய்துள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வட்டுக்கச்சி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரையே இவ்வாறு சொட்கன் துப்பாக்கியுடன் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் மிருகங்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தி வந்ததாக பொலிஸ் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்போபுர குற்றப்புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கைதுசெய்யப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரை தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் திருமலையில் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 7 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம் வசம் வைத்திருந்த ஒருவரை அடுத்தமாதம் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரஸாக் நேற்று (29) உத்தரவிட்டார்.

விஜித்தபுர, திருகோணமலை, பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளர்.

சந்தேக நபர் ஐஸ் போதைப் பாவனைக்கு அடிமையானவர் என்பதோடு, திருகோணமலை பகுதியில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் தொடர்பாக திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 7 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸார் கைதுசெய்து சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# மட்டு. புதூரில் கசிப்பு வியாபாரி கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள புதூர் பிரதேசத்தில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த பெண் ஒருவரை 20 போத்தல் கசிப்புடன் நேற்று முன்தினம் (28) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட பலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் சம்பவ தினமான நேற்று முன்தினம் மாலை கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை கைதுசெய்ததுடன், 20 போத்தல் கசிப்பை மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சில்லறைக்கடையில் பணம் திருட்டு

(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்தில் அமைந்துள்ள சில்லறைக் கடையொன்றில் ஒரு தொகைப் பணம் நேற்று முன்தினம் இரவு (28) 8.30 மணியளவில் திருடப்பட்டுள்ளது.

கடை உரிமையாளர் அவசரத் தேவை ஒன்றிற்காக வெளியில் சென்றதை அவதானித்த திருடன் கடையினுள் நுழைந்து அங்கிருந்த ஒரு தொகைப் பணத்தை திருடிச் சென்றுள்ளான்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடியில் காணாமல்போனவர் 5 நாட்களின் பின்னர் சடலமாக மீட்பு!

(கனகராசா சரவணன்)

கடந்த 22ஆம் திகதி காணாமல்போன குடும்பஸ்தர் ஒருவர் 5 தினங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள திருக்கொண்டியா கேணி ஆற்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கொண்டியாகேணி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய பரமானந்தம் ராயு என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 22ஆம் திகதி காணாமல் போயுள்ள நிலையில், அவர் தொடர்பாக அவரது மனைவியார் 23ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் குறித்த ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து குறித்த சடலத்தை அவரது மனைவி அடையாளம் காட்டியதையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை வைத்தியசாலை குப்பை எரிக்கும் இயந்திரம் சேதம்; அதிலிருந்து வெளியாகும் புகையால் நோயாளர்கள் சிரமம்

## புனரமைத்துத் தருமாறு நோயாளர்கள் கோரிக்கை





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் குப்பை எரிக்கும் இடத்தை உடனடியாக புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

குப்பை எரிக்கும் இயந்திரத்தின் ஒரு பகுதி உடைந்து காணப்படுவதனால் அதிலிருந்து வெளியாகும் புகைமூட்டம் நோயாளர்கள் விடுதிக்குள் வருவதுடன், துர்நாற்றமும் வீசுவதாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவரும் விடுதிக்குள் குப்பைகள் எரிப்பதனால் புகைமூட்டம் வருவதாகவும். உணவுகளை உட்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேநேரம், குப்பை எரிக்கும் பகுதியில் பிரேத அறை காணப்படுவதாகவும் தொடர்ச்சியாக மக்கள் அப்பகுதியில் நடமாடி வருவதினால் குப்பை அறுக்கும் இயந்திரத்தின் ஒரு பகுதி உடைந்து விழுந்துள்ளதால் புகைமூட்டம் மேல் நோக்கிச் செல்லாமல் மக்கள் நடமாடும் பகுதிக்குள் வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்கள் மட்டுமல்லாது வைத்திய சாலைக்கு நோயாளர்களை பார்ப்பதற்கு வருகை தரும் உறவினர்களும் வைத்தியசாலை உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவரும் விடுதிக்குப் பொறுப்பான தாதிய உத்தியோகத்தர்கள் முறைப்பாடு புத்தகத்தில் திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

ஆனாலும் குறித்த வைத்தியசாலையின் குறைபாடுகள் குறித்து வைத்தியசாலை நிர்வாகம் கவனமெடுத்து குப்பை எரிக்கும் இயந்திரத்தின் உடைந்த பகுதியை புனரமைப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# உயிர்காப்பு பயிற்சியை பூர்த்திசெய்தோருக்கு சான்றிதழ் - அனுமதிப்பத்திரம் வழங்கிவைப்பு





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலையில் உயிர்காப்பு பயிற்சி பாடநெறியை பூர்த்திசெய்த 33 பேருக்கான சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

உயிர்காப்பு நடவடிக்கை பொறுப்புவாய்ந்த தொழிலாகக் காணப்படுகின்றது. இத்துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் சிறந்த தொழிலைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தொழிலின் கௌரவம் பேணும் வகையில் செயற்படுவதுடன், நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது. இலவசமாக கிடைக்கப்பெற்ற இப்பயிற்சி ஊடே மாவட்ட மக்களின் பாதுகாப்புக்கு ஏற்றால்போல் பங்களிப்பை வழங்குமாறு இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக் கொண்டார்.

இப்பாடநெறிக்கு நேர்முகத்தெரிவு மூலம் பயிலுனர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், திருகோணமலை மெக்கேசர் நீச்சல் தடாகத்தில் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், இலங்கை உயிர்காப்பு சங்கச் செயலாளர் சமீர ஜீவந்த உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் முட்டை ஒன்றை 60 ரூபாவுக்கு விற்ற வர்த்தகருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கட்டுப்பாட்டு விலையை மீறி 60 ரூபாவுக்கு முட்டை விற்பனைசெய்த வர்த்தகரை ஒரு இலட்சம் ரூபா அபராதமாக செலுத்துமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் உத்தரவிட்டு தீர்ப்பளித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் ஆர்.எவ்.அன்வர் சதாத் தலைமையிலான குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, அரசாங்கம் அறிவித்த முட்டையின் விலை 50 ரூபாவாக இருந்தபோது அதனை மீறி வர்த்தகர் ஒருவர் 60 ரூபாவுக்கு விற்பனை செய்துவந்த நிலையில், அவரை கைதுசெய்து உடனடியாக அன்றைய தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் முன்னிலையில் ஆஜர்படுத்தி யதையடுத்து அவரை அபராதமாக ஒரு இலட்சம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

இதேவேளை, முட்டையின் கட்டுப்பாட்டு விலை 50 ரூபாவாக அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில்,

மொத்த வியாபாரிகளிடமிருந்து 58 ரூபாவுக்குதான் முட்டையை கொள்வனவு செய்யவேண்டியுள்ளதுடன், அதனை 60 ரூபாவுக்கு விற்கவேண்டியுள்ளது. அதில் இலாபமாக 50 சதம் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான நிலையில், வாடிக்கையாளர்களுக்கு 60 ரூபாவுக்கு முட்டையை விற்கும்போது கட்டுப்பாட்டு விலையை மீறி கூடிய விலைக்கு முட்டையை விற்றதாக நுகர்வோர் அதிகாரசபை எமக்கு எதிராக வழக்கு தொடர்கின்றபோது ஒரு முட்டைக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்தால் என்ன செய்வது என வர்த்தகர் ஒருவர் இதன்போது தெரிவித்தார்.

எனவே, முட்டை வியாபாரம் வேண்டாம் என முட்டை வியாபாரத்தில் ஈடுபட்ட பல வர்த்தகர்கள் முட்டை வியாபாரத்தை நிறுத்தியுள்ளனர். இதனால் முட்டைக்கு மாவட்டத்தில் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மருதமுனையில் 20 மாணவர்கள் சகல பாடங்களிலும் ஏ தரச் சித்தி

(பெரியநீலாவனை நிருபர்)

வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றின்படி மருதமுனை பிரதேசத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளிலும் இருந்து 20 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியைப் பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

மருதமுனை கமு/அல்-மனார் மத்திய கல்லூரியில் ஆறு மாணவர்கள் 9ஏ சித்தியை பெற்றுள்ளனர். எம்.என்.மிஸ்பர், எம்.ஆர். முஹம்மட் மரீஸ், எப்.பாத்திமா ஹிமா, எம்.ஜே.லிஹா லக்னி, என்.சி.ஆயிஷத்துல் ஜன்னாஹ், எம். எஸ் பாத்திமா தஹானி ஆகிய மாணவர்களும், கமு/மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் இருந்து எம்.எப்.எப் சிம்லா, ஏ.என்.ஏ நம்றா, எம்.எஸ்.எஸ்.செய்னப், பி.எப்.சுல்சிலா ஆகிய மாணவர்களும், கமு/ அல் -மதீனா வித்தியாலயத்தில் இருந்து எம்.ஆர்.ஆபித் ஹம்தி, எம்.ஜெ.பாத்திமா அப்லத், ஏ.பாத்திமா ஹீபா, ஏ.ஜெ.பாத்திமா பதானா ஆகிய மாணவர்களும், புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் இருந்து ஏ.நுஷா, ஆர்.ஷிபி, ஏ.நஜீலா ஆகிய மாணவர்களும், கமு/அல்-ஹம்றா மகா வித்தியாலத்தில் இருந்து எம்.ஜே. இம்தாத் அஹ்னப், ஏ.ஆர்.பாத்திமா தூபா, டபிள்யு.வி.ஏ.சுஜய்த் அபூபாக்கர் ஆகியோரும் என 20 மாணவர்கள் 9ஏ சித்தியை பெற்றுள்ளனர்.

# கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளை புனரமைக்க நடவடிக்கை



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் கிராமிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செப்பனிடும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

பேராறு ஜனசவிய சிறு வீதிகள் செப்பனிடும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏசிஎம்.ஜவாஹிரின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மழை காலங்களில் போக்குவரத்து செய்ய முடியாத நிலையிலுள்ள வீதிகளே இவ்வாறு செப்பனிடப்பட்டு வருகின்றன.

பேராறு மேற்கு அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கைக்கமைய பிரதேச சபை உறுப்பினர் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக அறிவிப்பாளர் அப்துல் ஹமீத் கலந்துகொள்ளும் வழிகாட்டல் மாநாடு

(பொலிவேரியன் நிருபர்)


இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் 03ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 தொடக்கம் நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூரின் பங்களிப்புடன் இடம்பெறும் இவ்விழாவில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என்.புள்ளைநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

அஷ்ஷெய்யத் றஸ்மி மௌலானாவின் ஒருங்கமைப்பில் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீமின் தலைமையில் இடம்பெறுகின்ற இந்நிகழ்வில், ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்துகொள்கிறார்.

அதிதிகளுடன் கலந்து சிறப்பிக்கும் இளைய தலைமுறையினருக்கான இந்த மாநாடுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.

# உளநல தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை





(மட்டக்களப்பு நிருபர்)

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்காண பயிற்சிப் பாசறை மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட உளவள அதிகாரி ஜனார்தனி நரசிம்மன் தலைமையில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களின் உளநலத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களுடைய ஆளுமை மற்றும் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிப் பாசறை சிறப்பாக இடம்பெற்றது.



கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் வளவாளர்களினால் மாணவ, மாணவிகளுக்கு ஓவியம் வரைவதற்கான நுட்பமுறை மற்றும் ஆலோசனைகளை வழங்கியதுடன், பயிற்சியை நிறைவுசெய்த மாணவ மாணவியருக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# போடியார் புலம்பல்!



**தமிழருக்கு காணி பொலிஷ் அதிகாரம் கொடுக்கக்கூடாதாம் எண்டு இனவாத கொட்டப்பாக்கு எம்.பி. சரத் வீரசேகர கொக்கரிக்கிறாரு எலுவா?**

**அவரு சொன்னத கேட்டுத்து அரசாங்கத்தில ஒட்டி இருக்கிற தமிழ் வீணக் கட்சி அமைச்சர் டக்ளஸ், மட்டக்களப்பு இராஜாங்கங்கள் புள்ளையான், வியாழேந்திரன் என்ன மௌனமாக இருக்காங்க. அவங்களுக்கு இதுக்கெல்லாம் ரோசம் வராது.. கூட்டமைப்பு காரர்கள குற சொல்லுறது மட்டும்தான் இவங்கட தொழில்.. நான் சொன்னது சரி எலுவா..?**

# வாழைச்சேனை ஆயிஷா வித்தியாலயம் மட்டக்களப்பு மத்தி வலயத்தில் முதலிடம்

(மீராவோடை நிருபர்)

வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றிய 55 மாணவிகளில் எம்.ஆர்.எவ்.றிஸ்லா, எம்.யூ.எவ்.ஹனா, எஸ்.ஏ.எவ்.உம்றா, ஏ.பி.அஸ்பா ஆகிய நான்கு மாணவிகள் அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளதுடன், ஆறு மாணவிகள் எட்டு 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அதேபோன்று பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவிகளும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

அந்தவகையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் தரப்படுத்தலின்படி ஆயிஷா வித்தியாலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ்வாறு சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகளுக்கும், பரீட்சை காலத்தில் பாடசாலையில் சேவை புரிந்த எம்.ரீ.எம்.பரீட் அதிபருக்கும் க.பொ.த. சாதாரண தர வகுப்பு இணைப்பாளர் ஆசிரியர் கே.ஆர்.எம்.இர்ஷாத், வகுப்பாசிரியர்களான ஜே.எம்.நியாஸ், எம்.எல்.எம்.முஸம்மில் உட்பட கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.